Registered as a news paper.  விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!
சகல நிகழ்வுகளுக்கும் ராசியான ஸ்தாபனங்கள்
மகாராசி சில்க்ஸ் — ரோசி சில்க்ஸ்
T.P - 0777 286247

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 30 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா (15.12.2004) புதன்கிழமை இதழ்:76

# அரசின் விசேட செய்தி எதனையும் எரிக் சொல்ஹெய்ம் கொண்டுவரார்!

## நோர்வே தூதரக வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று காலை வன்னிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இவரது வருகையின்போது முக்கிய முடிவு எதையும் அரசாங்கம் புலிகளுக்கு கொடுத்தனுப்பும் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டாலும், இது இரு தரப்பையும் நெருக்கமாக வைத்திருப்பதற்கான ஒரு சந்திப்பாகவே இருக்கும் என நோர்வே தூதரக வட்டார தகவல்கள் தெரிவித்தன.

இன்று காலை 11 மணிக்கு எரிக் சொல்ஹெய்ம் வவுனியாவிலிருந்து தரை வழியாகவே கிளிநொச்சி வருவார் என முன்னர் அறிவிக்கப்பட்ட போதும்,

நேற்றிரவு பாதுகாப்பு அமைச்சு சொல்ஹெய்ம் வன்னி செல்ல ஹெலிகொப்டரை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய கடற்படைக் கப்பல்கள் கொழும்பு துறைமுகம் வந்தன!



(கொழும்பு)

தென்பகுதி கடற்பரப்பில் இன்று அரம்பமாகவுள்ள ஒப்பரேஷன் எக்சத் என்ற ஒத்திகை பயிற்சி நடவடிக்கையில் பங்கேற்பதற்காக இரண்டு இந்திய கடலோர காவற்படைக் கப்பல்கள் கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்த இதே வேளை -

இந்திய கரையோர காவற்படைத் தளபதி வைஸ்அட்மிரல் ஏ.கே.சிங்கும் கொழும்புக்கு விஜயம்செய்துள்ளார்.

கொழும்பு நகருக்கு தெற்கேயுள்ள கடற்பரப்பரப்பில் ஒப்பரேசன் எக்ஷத் எனற ஒத்திகைப்பயிற்சி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இந்த ஒத்திகையில் பங்கேற்பதற்காக இந்திய கடலோரக் காவற்படையின் சாரங்கா மற்றும் துர்க்காபாய் தேஷ்முக் ஆகிய இரண்டு கப்பல்கள் நேற்றுமாலையே கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்தன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை - அக்கரைப்பற்றில் இளைஞர் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றில் நேற்றுமுன்தினம் இரவு 24 வயது இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சிவகுரு உதயகுமார் என்ற இந்த இளைஞர் தனது வீட்டில் இருந்தபோது - அங்கு சென்ற ஆயுதம் தாங்கிய இளைஞர் ஒருவர் மேற்படி நபரை அழைத்து கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

காயமடைந்த நிலையில் கல்முனை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் அவர் உயிரிழந்துவிட்டதாகக் கூறப்பட்டது.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய துப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி சேவை இடைநிறுத்தம் சமாதான முயற்சியை பாதிக்காது

### விமானப்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு விமானப் படையின் ஹெலிகொப்டர்களை போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்துவதில்லையென்று விமானப்படை எடுத்திருக்கும் முடிவு சமாதான முயற்சிகளை எந்த விதத்திலும் பாதிக்காது என்று விமானப்படைத்தளபதி எயர்வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு விமானப்படையின் ஹெலிகொப்டர்களை சேவையில் ஈடுபட அனுமதிப்பதில்லை என்று எடுக்கப்பட்டமுடிவு சமாதான முயற்சிகளைப் பாதிக்குமென தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் குறித்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நோர்வே சமாதானத் தூதுவரின் போக்குவரத்து நடைமுறைகள் மட்டுமே இந்தத் தீர்மானம் காரணமாக மாற்றப்பட்டுள்ளது. போர் நிறுத்தக் க்ண்காணிப்புக் குழுவுடன் பேசியே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பறக்கும், தரையிறங்கும் விமானங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ அவசர செயலணிக்குழு அமைப்பு!

(கிளிநொச்சி)

வன்னிப் பெருநிலப்பரப்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை துரிதமாகவும், ஒருமுகப்படுத்தியும் வழங்கும் நோக்கில் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நேற்று நடைபெற்ற அவசர கலந்துரையாடலில் சர்வதேச உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களை இணைத்து அவசர தேவைகளை நிறைவேற்றுவதற்கான செயலணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமாலை 4 மணியளவில் திட்டமிடல் செயலகத்தின் துணைப் பொறுப்பாளர் மாறன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் 12 சர்வதேச அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரதிநிதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அரசியற்துறைப் பொறுப்பாளர்கள், விடுதலைப் புலிகளின் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)





## வடக்கு - கிழக்கு ஆளுனராக டிரோன் இன்று பதவியேற்பு!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுனராக டிரோன் பெர்னாண்டோ இன்று பதவியேற்கவுள்ளார்.

இன்று காலை 9 மணிக்கு திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண ஆளுனர் அலுவலகத்தில் இடம்பெறும் சர்வமதப் பிரார்த்தனையைத் தொடர்ந்து டிரோன் பெர்னாண்டோ வடக்கு - கிழக்கு மாகாண ஆளுனராகப் பதவியேற்கவுள்ளார்.

இந்தப் பதவியேற்பு வைபவத்தின் பின்னர் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் வடக்கு - கிழக்கு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளன.

இன்றைய பதவியேற்பு வைபவத்தில் வடக்கு - கிழக்கு மாகாண தலைமைச் செயலாளர் உட்பட பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (தே)

நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழையினால் கிளிநொச்சி - வட்டக்கச்சி பகுதியில் வெள்ளம் ஏற்பட்டிருப்பதையும், முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் படகுப் போக்குவரத்து நடத்தப்படுவதையும் படங்களில் காணலாம்.

# லெப்.கேணல் மறவன் மாஸ்ரரின் மறைவு கடற்றொழில் சமூகத்திற்கு பேரிழப்பாகும்

## வடமராட்சி வடக்கு சமாசம் இரங்கல்

கடற்புலிகளின் முக்கிய உறுப்பினரும், கடற்றொழிலாளர் சங்கம், சமாசம், சம்மேளனம் ஆகியவற்றின் மேலாளருமான மறவன் மாஸ்ரரின் இழப்பு கடற்றொழில் சமூகத்தின் வளர்ச்சிக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. இவ்வாறு வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் அவரது மறைவையொட்டி வெளியிட்ட இரங்கற் செய்தியில் தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்மக்கள்மீது இலங்கை இராணுவத்தினர் இழைத்த அநீதிகளுக்கு எதிராக 1970 ஆம் ஆண்டு தனி மனிதனாக நின்று எதிர்த்துப் போராடியவர். இராணுவத்தின் அச்சுறுத்தலுக்கும் மிரட்டலுக்கும் அடிபணியாது தனிமனிதனாக நின்று எதிர்த்த மறவன் மாஸ்ரர், இந்திய இராணுவத்தினர் அமைதிப்படை என்ற போர்வையில் தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிகளை இழைத்தவேளை, தனது ஆசிரியர் பணியைத் துறந்து விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட்டவர்.

இவரது அரசியற்பணியின்போது எமது கடற்றொழில் சமூகத்தை முன்னேற்றுவதற்குப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அதற்காக முன்னின்று உழைத்தவர் மறவன் மாஸ்ரர். கடற்றொழில் சமூகத்தினருக்கிடையே ஒற்றுமையும், நட்புறவையும் வளர்ப்பதற்காக கடற்றொழில் சங்கங்கள், சமாசங்கள், சம்மேளனங்களை அமைத்து ஒரு கூட்டுறவை ஏற்படுத்தி உழைத்தவர். அதில் எதிர்பார்த்த வெற்றியையும் கண்டவர்.

கடற்றொழில் சங்கங்களுக்குச் சென்று அரசியல் பணியில் ஈடுபட்டு திரும்பிய பின்னர் சாவடைந்துள்ளார். இவரது மறைவு எமது சமூகத்தின் வளர்ச்சிக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## ஓராண்டு நினைவலைகள்



### அமரர் நாகலிங்கம் சின்னத்துரை

(முன்னாள் யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்க களஞ்சியப் பொறுப்பாளர்)

திதி 15.12.2004

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து
எம்மையெல்லாம் இத்தரணியில் வாழ வழிவகுத்த
அன்புத் தெய்வமே எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு என்ன ஐந்நூறு கோடி
ஆண்டு வந்து போனாலும் நம் நெஞ்சம்
மறக்கவில்லை அப்பா நம் நினைவோ அழிவதில்லை
எங்கள் கனவுகள் காலம் கடந்தாலும் உங்கள் முகம்
காணும்போது கலங்கிடும் எம் நெஞ்சம் கண்ணீர்
விடும் நம் கண்கள் மாறுமோ நம் இதயவலி
முடியவே முடியாது நம் அன்புத் தெய்வமே
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்தி
அடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரன்மார், பேத்தி
உற்றார், உறவினர், நண்பர்கள்.

இல.10, 2ஆவது ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/3471)

## நாதன்ஸ் யாழ்ப்பாணம்.

இன்று மட்டும் (குளிரூட்டப்பட்டது)
இளைய தளபதி விஜய், சங்கவி நடித்த
**கோயம்புத்தூர் மாப்பிள்ளை** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30.2.30 (பு.நே)
தினசரி இரவு 6.30, 9.30 [பு.நே]
**HULK**
அடுத்த வெளியீடு **அழகிய தீயே**

## ராஜா யாழ்ப்பாணம்.

16ம் திகதிவரை அநேகரின்
வேண்டுகோளுக்கிணங்க
சேரன், சிநேகா, கோபிகா,
மல்லிகா நடித்த
**ஆட்டோகிராப்** (ரீல்ஸ்)
புதிய நேரம்: 10.30, 2.30, 6.30 மட்டும்

## நிறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், நிகிதா நடித்த
**சத்ரபதி** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
**SPIDER MAN - 2**

## நாகம்ஸ் சுன்னாகம்

அஜித், பூஜா மற்றும் பலர் நடித்த
**அட்டகாசம்**
கா.நே 11.00, 3.00, 7.00 (பு.நே)
மிக விரைவில்
அடுத்த வெளியீடு
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதினம்



அர்ஜுன், லைலா,
வடிவேல் நடித்த
**ஜெய் சூர்யா**

## YEAR END SPECIAL OFFER

K,K,Phone Service



### ஆண்டிறுதி சிறப்புச் சலுகை

அனைத்து வகையான ஹவுசிங், பற்றறி வகைகள் கவர் வகைகளைப் பெற்றிட விரையுங்கள்
K.K.Phone Service

சகலவிதமான
தொலைபேசி
வகைகளையும் ஒரே
கூரையின்கீழ்
உத்தரவாதத்துடன் பெற்றிட
இன்றே விரையுங்கள்

நிகக்குறைந்த விலையிலான மோட்டரோலா, எரிக்சன் போன்ற தொலைபேசி வகைகளைப் பெற்றுக்கொள்ள
K.K.Phone Service

K.K.Phone சேவைக்கு



NOKIA 3100 | NOKIA 1100 | NOKIA 2300 | NOKIA 3310

**K.K.போன் ஷொப்**

இல. 01 நவீன சந்தை
மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

(C/3466)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வலம்புரிச் சங்கு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ் (மருந்துக்கடை), 76, பெரியகடை, யாழ்ப்பாணம். T.P.: 222 2912

## சிறு விளம்பரம்

### மணமக்கள் தேவை

லண்டன், கனடா, ஜேர்மனியில் வசிக்கும் மணமகன் / மணமகள் விபரங்கள் எம்மிடம் உண்டு. படம், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். `சங்கானையில் - காலை - 071 2565096, யாழ்ப்பாணத்தில் - மாலை - 077 6176476. (திருமண தரகர் கட்டணம் இல்லை)

## யாழ்ப்பாணம் - மாநகரசபை

### நல்லூர் செங்குந்தா பொதுச்சந்தைக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2004

மாநகரசபைக்கு சொந்தமான நல்லூர் செங்குந்தா பொதுச் சந்தைக் கடைகளில் கீழ்தளக் கடைகள் இல:- 02, 04, 10, 11 மேல்தளக்கடைகள் இல:- 2/1, 6/1, 12/1 என்பவற்றிற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்.மாநகர ஆணையாளராகிய என்னால் 28.12.2004ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பி.ப.2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

- கேள்வி நிபந்தனைகள் ஏற்கனவே குத்தகை அறிவித்தலில் வழங்கப்பட்டவையாகும். உரிய கேள்வி கோரல் நிபந்தனைகளைப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| கேள்விப் படிவம் வழங்கும் இறுதித் திகதி | 28.12.2004 செவ்வாய்க்கிழமை காலை 12 மணிவரையும் |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி | 28.12.2004 செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிவரையும் |
| கேள்வி திறக்கும் திகதி | 28.12.2004 செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு |

| கடைகள் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை (பெறுமதிசேர்வரி (Vat) தவிர்த்து) |
|---|---|
| 1. கீழ் தளக் கடைகள் (கடை ஒன்றுக்கு) | 360,000/= |
| 2. முதலாம் மாடிக் கடைகள் (கடை ஒன்றுக்கு) | 180,000/= |

மேலதிக விபரங்கள் யாவும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சுவாநிதி க.குணராசா
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

திகதி: 06.12.2004

(C/3469)

## விண்ணக வாழ்வில்

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 25 03 2003 — விண்ணில் 15 11 2004



**பத்திநாதர் - சுதாகரன் மேரிகென்சியா**

சீவியத்திலும் என்னை நேசித்தவர்களே!
மரணத்திலும் மறவாதீர்கள்

இவரது பிரிவால் துயருறும் —
உற்றார், உறவினர், சகோதரர்கள்.

தகவல்-
இ.பத்திநாதர்
இல.04.சென்மேரிஸ் வீதி,
நாவாந்துறை.

(C/3467)

## கண்ணீர் அஞ்சலி



வலி. வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின்
செயலாளரும், தெல்லிப்பளை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின்
முன்னாள் தலைவருமாகிய திரு. சி. சாம்பசிவம் அவர்களின்
மைந்தன்

### ரகுலதரன்

அவர்களின் அகால மரணச் செய்தி அறிந்து மிகுந்த கவலையும், வேதனையும் அடைகிறோம், தாங்கொணா துன்பத்தை பகிர்ந்து கொள்கிறோம்.

ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வலி. வடக்கு பொது அமைப்புகளின் ஒன்றியம்

(C/3468)

# தேசிய அமைப்பாளராக எஸ்.பியே தொடர்வார்!

## ரணில் அறிவிப்பு

(கொழும்பு)



ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்காவுக்கு இரண்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டபோதிலும் - அவர் தொடர்ந்தும் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை வகிப்பாரென, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன் கட்சியின் மீள்புனரமைப்புக்குழு எப்பொழுதும் திஸநாயக்கவைச் சந்திப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ள தெனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது சிறையிலுள்ள திஸநாயக்கவை விடுதலை செய்வதற்குச் சகல கட்சிகளும் உதவ வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# பிரதித் தலைமை அதிகாரியாக சுசில் சந்திரபால பதவியேற்பு

(கொழும்பு)

இராணுவத்தின் புதிய பிரதித் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால இராணுவத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.



சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில், சமய கிரிகைகளை அடுத்து மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால உத்தியோக பூர்வமாக வரவுப் பதிவுப் புத்தகத்தில் ஒப்பமிட்டார்.

1971 ஆம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்து கொண்ட இவர், கடந்த ஒக்ரோபர் 15 ஆம் திகதி முதல் அதிகாரிகளுக்கான பொது அதிகாரியாகவும் பணியாற்றி வருகிறார்.

வன்னி மற்றும் யாழ்.படைத்தலைமையகங்களின் கட்டளைத் தளபதியாகவும், 11, 55, 23 ஆவது டிவிசன்களின் கட்டளை அதிகாரியாகவும் பணியாற்றிய இவர் - 1999 ஆம் ஆண்டில் மேஜர் ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு வழங்கும் கரேஜஸ் கப்பலில்

# சீனப் பீரங்கியைப் பொருத்த அமெரிக்கா அனுமதி மறுப்பு!

(கொழும்பு)

அடுத்தமாதம் இலங்கைக்கு வந்துசேரவுள்ள கரேஜஸ் என்ற போர்க்கப்பலில் சீனப் பீரங்கிகளைப் பொருத்துமாறு இலங்கை விடுத்த கோரிக்கையை, அமெரிக்கா நிராகரித்துவிட்டதாகத் தெரியவருகிறது.



கரேஜஸ் கப்பல்

அடுத்தமாதம் இலங்கைக் கடற் படையிடம் கையளிக்கப்படவுள்ள கரேஜஸ் கப்பலை, இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு 13 அதிகாரிகளும், 60 கடற்படையினரும் அமெரிக்கா சென்றுள்ளனர்.

இவர்களுக்கு அங்கு பயிற்சி கள் வழங்கப்பட்டு வருகின்றன. கப்டன் எஸ்.எஸ்.ரணசிங்க இந்தக் கப்பலை வேர்ஜினியாவிலுள்ள நோபேக் துறைமுகத்திலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரவுள்ளார்.

பால்டிமோர் துறைமுகத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கைவிடப்பட்ட நிலையில் இருந்த இநதக் கப்பல் - திருத்தவேலைகள, பயிற்சி மற்றும் இயங்குதிறன் குறித்து பரிசோதனைக்காக நோபேக் துறைமுகத்துக்குக் கொண்டுசெல்லப்படவுள்ளது.

இந்தக் கப்பலுக்கு கடற்படை A 621 எனப் பெயரிட்டுள்ளது.

கரேஜஸ் கப்பலில், சீனாவின் நொறிங்கோ நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பீரங்கிகளைப் பொருத்தித்தருமாறு இலங்கை அரசு அமெரிக்காவிடம் கேட்டிருந்தது.

ஆனால், அதற்கு அமெரிக்கா மறுப்புத் தெரிவித்துவிட்டது.

இந்தக் கப்பல் அமெரிக்கத் தயா ரிப்பான போபர்ஸ் 40/60 ரக பழைய ரக பீரங்கியே பொருத்தப் பட்டிருக்கிறது. இதேவேளை, இந்தக் கப்பலில் மேலதிகமாகப் பொருத்த வேண்டிய ஆயுத தளபாடங்களுடன், கொழும்புத் துறை முகத்திலிருந்து கொள்கலன் ஒன்றும் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவால் இலங்கையின் தேசியப் பாதுகாப்புக்கென அன்பளிப்புச் செய்யப்பட்ட கரேஜஸ் கப்பல் - 690 மில்லியன் ரூபா பெறுமதியானது. மிகவும் பழைமையான இந்தக்



போர்பஸ் 40/60 பீரங்கி

கப்பலில் நவீன இலத்திரனியல் சாதனங் கள், கண்காணிப்புக் கருவிகள், கணினிகள் என்பன பொருத்தப்பட்டுள்ளன

இந்தக் கப்பல் பெப்ரவரி மாத நடுப்பகுதியிலேயே இலங்கையை வந்தடையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# 64 ஈழத் தமிழ் அகதிகள் விமானம் மூலம் திரும்பினர்!

(கொழும்பு)

இந்தியாவில் தங்கியிருந்த மேலும் 64 தமிழ் அகதிகள் ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் தூதராலயத்தின் ஏற்பாட்டில் விமானம் மூலம் அழைத்துவரப்பட்டனர்.

கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்த இவர்கள் - வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகள் இடம் பெற்று வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# புலிகளின் பகுதிக்குள் தரைதட்டிய வெளிநாட்டு வர்த்தகக் கப்பல்

(கொழும்பு)

சீமெந்து ஏற்றிவந்த - வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட - வர்த்தகக்கப்பல் ஒன்று சரியாக நங்கூரமிடாததால், திருகோணமலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள கடற்பகுதிக்குள் சென்று தரைதட்டியுள்ளது.

24 மியான்மார் சிப்பந்திகளுடன் தரைதட்டியுள்ள கப்பலை மீட்கும் நடவடிக்கைகளை கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர்.

திருகோணமலையிலுள்ள மிட்சுயி சீமெந்து நிறுவனத்துக்கு, சீமெந்து ஏற்றிவந்த இந்தக்கப்பல், பேய்முனைக்கு அண்மையிலுள்ள கவிலியா கலங்கரை விளக்குக்கு அண்மையில் நங்கூரமிடப்பட்டது. ஆனால், சரியாக நங்கூரமிடாததால, சுமார் ஒரு கடல்மைல் தொலைவுக்கு அசைந்து சென்ற கப்பல் - புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கடற் பிரதேசத்துக்குள் தரைதட்டியுள்ளது என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கப்பலிலிருந்து சரக்கு இன்னமும் இறக்கப்படவில்லை என்றும், கப்பலின் நான்காவது மாடியில் சிறுவெடிப்பு ஏற்பட்டு அதனூடாக நீர் உட்புகத் தொடங்கியுள்ளது என்றும் அதனை வெளியேற்றும் நடவடிக்கையில் கப்பலில் உள்ளவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

இதேவேளை, தரை தட்டியுள்ள கப்பலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளிருந்து வெளியே கொண்டுவரும் நடவடிக்கைக்காக மஹாநுவர என்ற விசேட இழுவைக் கடற்கலம் கொழும்பிலிருந்து, திருகோணமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

கப்பலை மீட்பதற்கு கடற்படையினர் ஆயத்தமாகி வருகின்றனர்.

## இந்தியக் கலைஞர்களின் நிகழ்வில்

# குறிப்பிட்ட ஒரு ஊடகம் மட்டும் உஷார் நிலையில் இருந்தது ஏன்?

## விமல் வீரவன்ச கேள்வி



(கொழும்பு)

கொழும்பில் நடைபெற்ற இந்தியக் கலைஞர்களின் கலை நிகழ்வில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சு சம்பவத்தை - ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இந்தக் குண்டு வீச்சுச் சம்பவம் குறித்து அவர் கருத்துக் கூறுகையில் -

கலை நிகழ்ச்சி நடைபெற்றபோது, அனைத்து ஊடகத்தினரும் அன்றைய நிகழ்ச்சி குறித்த தகவல்களைத் திரட்டும் நோக்கில் அரங்கில் காத்திருந்தனர்.

ஆனால், குறிப்பிட்ட ஒரு ஊடக நிறுவனத்தினர் மட்டும் அரங்கைச் சூழ 10 ஒளிப்படக் கருவிகளைப் பொருத்தி, இவ்வாறான வன்முறை ஒன்று இடம்பெறும் என்று காத்திருந்துள்ளனர்.

ஏனைய ஊடகவியலாளர்கள் சிந்திக்காத வகையில் குறிப்பிட்ட நிறுவனம் மட்டும் மாறுபட்டுச் சிந்தித்து தனது ஊடகவியலாளர்களைத் தயார் நிலையில் வெளியில் வைத்திருந்ததன் பின்னணி என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கிடையில், கலை நிகழ்ச்சியில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலங்கை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என, ஜாதிக ஹெலஉறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஓமல்பே சோபித தேரர் கூறியுள்ளார்.

இந்த நிகழ்வுக்குத் தேவையான பாதுகாப்பு வழங்காத காரணத்தினாலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஏற்கனவே மாத்தறையில் இடம்பெற்ற ஒரு பொது நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி - இந்தக் குண்டு வெடிப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சியே காரணம் என குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, கலை நிகழ்ச்சியில் இடம்பெற்ற கைக் குண்டுத் தாக்குதலுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் எந்த விதமான தொடர்புகளும் இல்லையென பொலிஸ் தரப்பு தங்களது உத்தியோக பூர்வ அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# டொக்டர் நரேந்திரனையும், தீப்தியையும் நீதிமன்றத்தில் ஆஜராகப் பணிப்பு

இருதய சத்திரசிகிச்சை நிபுணர் டொக்டர் எஸ். நரேந்திரனையும், அவரைக் கத்தியால் குத்தியதாகக் கூறப்படும் அமைச்சர் ரோகித போகொல்லாகமவின் மனைவி தீப்தி போகொல்லாகமையும் எதிர்வரும் 4 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு பிரதம நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறிப்பிட்ட பெண்மணி டொக்டர் எஸ். நரேந்திரனின் வீட்டுக்குச் சென்று, தனது கணவனின் காதல் விவகாரம் தொடர்பாக ஏற்பட்ட வாய் தகராறை அடுத்து, இவரைக் கத்தியால் குத்தியதாக ஏற்கனவே பொலிஸ் விசாரணையின்போது தகவல் வெளியானது.

அதேநேரம் இந்தப் பெண்மணி சம்பந்தப்பட்ட டொக்டர் தன்னை பலாத்காரப்படுத்தியதாகவும், இதன் காரணமாகவே தான் கத்தியால் குத்தியதாகவும் பொரளை பொலிஸில் புகார் செய்துள்ளார்.

இருவரது முறைப்பாடுகளும் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது, இருவரையும் எதிர்வரும் 4ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிபதி சரோஜினி குசலா விஜயவர்தனா உத்தரவிட்டுள்ளார்.

# உதைபந்தாட்ட அரங்கில் குண்டுப் புரளியால் பதற்றம்



ஸ்பெயினில் உதைபந்தாட்டப் போட்டியொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தபோது - திடீரென குண்டுப் புரளி கிளப்பப்பட்டதால் ரசிகர்கள் அலறிக்கொண்டு ஓடினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மட்றிட் நகரின் பிரமாண்டமான சண்டியாகோ பெர்னடி அரங்கில் ஸ்பானிஷ் லீக் உதைபந்தாட்டத் தொடரில் றியல் மட்றிட் அணிக்கும் - றியல் சொகிடாட் கிளப் அணிக்கும் இடையில் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

றொனால்டோ, லூயிஸ் பிகோ, மைக்கல் ஓவன் உள்ளிட்ட பிரபல வீரர்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது 1-1 என்ற கோல் அடிப்படையில் இரு அணிகளும் சமநிலையில் இருந்தன.

அந்த வேளையில் திடீரென அங்குள்ள பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு - அரங்கில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாகவும், அங்கே செய்தியாளரை அனுப்பும்படியும் தொலைபேசி அழைப்பு ஒன்று அநாமதேயமாகக் கிடைத்தது.

70 ஆயிரம் ரசிகர்கள் கூடியிருந்த அரங்கத்தில் திடீரென குண்டுப்புரளி கிளப்பப்பட்டதால் - பொலிஸார் அனைவரையும் வெளியேறுமாறு அறிவித்தனர். இதனால் அவசரகால கதவுகள் திறக்கப்பட்டு பாதுகாப்பாக ரசிகர்கள் வெளியேற்றப்பட்ட பின்னரே, குண்டுப் புரளி வெறும் வதந்தி என்று தெரியவந்தது.

# ஐ.சி.சி தலைமையகம் டுபாய்க்கு மாறுகிறது!

(லண்டன்)

ஐ.சி.சி. தலைமை அலுவலகம் லண்டனில் இருந்து வேறு இடத்துக்கு மாறுகிறது.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) தலைமை அலுவலகம் லண்டனில் இருக்கிறது. பிரிட்டன் அரசு ஐ.சி.சிக்கு வரிச்சலுகை அளிக்க மறுத்துவிட்டது. இது சம்பந்தமாக பிரிட்டன் விளையாட்டுத்துறை அமைச்சகத்துடன் ஐ.சி.சி. நிர்வாகிகள் நடத்திய பேச்சுவார்த்தையில் பலன் எதுவும் கிட்டவில்லை. ஆகவே, ஐ.சி.சி அலுவலகத்தை லண்டனிலிருந்து வேறு இடத்துக்கு மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரிட்டன் அரசு எங்களுக்கு வரிச்சலுகை மறுத்துவிட்டது என்று தகவல் வந்திருக்கிறது. இது எங்களை மிகுந்த ஏமாற்றமடையச் செய்கிறது. இவ்வார இறுதியில் அவசரக்கூட்டம் நடத்தி, அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி முடிவெடுப்போம் என்கிறார் ஐ.சி.சி. தலைவர் ஈஷான் மானி. ஐ.சி.சி. தலைமையகம் அனேகமாக துபாய் அல்லது மலேசியா பகுதிக்கு மாற அதிக வாய்ப்புகள் உள்ளதாக, அந்த அமைப்பு நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

## விளையாட்டு

# பங்களாதேஷ் அணியில் புதுமுக வீரர் சேர்ப்பு!

(டாக்கா)

இந்திய கிரிக்கெட் அணி பங்களாதேஷில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிவருகிறது. இரு அணிகளுக்கும் இடையேயான 2 டெஸ்ட் போட்டித் தொடரில் டாக்காவில நடந்த முதல் டெஸ்டில் பங்களாதேஷ் இனிங்ஸ் மற்றும் 140 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியை கண்டது.

2 ஆவது டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் சிட்டகொங்கில் தொடங்கவுள்ளது.

இந்தப் போட்டிக்கான பங்களாதேஷ் அணியில் புதுமுக வேகப் பந்து வீச்சாளர் நஜ்முல் ஹுசேன் இடம்பெற்றுள்ளார். 2 ஆவது டெஸ்ட போட்டிக்கான பங்களாதேஷ் அணி வருமாறு -

ஹபிபுல் பஷர் (கப்டன்), காலித் மசூத் (துணை கப்டன்), இக்பால், ஜாவித் உமர், முகமட் அஸ்ரபுல், ராஜின், அப்தாய் அகமட், முஷ்பிகுர் ரகுமான், முகமட் ரபீக், பைஷ்யா, மொர்தாஜா, ஜுபையர், மஞ்சுரல் இஸ்லாம் ரானா, நஜ்முல் ஹுசேன்.

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட்; அவுஸ்ரேலிய அணி அறிவிப்பு!

பாகிஸ்தான் அணி தற்போது அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகள கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது. முதல் டெஸ்ட் எதிர்வரும் 16 ஆம் திகதி பெர்த்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டிக்கான 12 பேர் கொண்ட அவுஸ்ரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சைமன் கடிச் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

நியூஸிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரில் சிறப்பாகப் பந்து வீசிய பிரட் லீக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. காயத்தில் இருந்து மீண்ட இவரின் பந்துவீச்சு சமீபகாலங்களாக குறிப்பிடும்படியாக இல்லை.

உலகின் இரண்டாவது சிறந்த அதிவேகப்பந்து வீச்சாளரான இவருக்கு இம்முறை கட்டாயம் வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதில் கப்டன் பொண்டிங் உறுதியாக இருந்தார். தேர்வுக்குழுவின் அறிவிப்புக்கு பிறகு பேசிய பொண்டிங் - கடந்த சில போட்டிகளில் பிரட் லீயை அணியில் பயன்படுத்தமுடியாத சூழ்நிலை இருந்து வந்தது.

தனது திறமையை அழுத்தம் திருத்தமாகவே இவர் வெளிப்படுத்தி வந்தார். இவர் கட்டாயம் பெர்த் டெஸ்டில் பங்கேற்பார்.

ஒரு அணியில் சிறந்த வேகப் பந்துவீச்சாளர்கள் இருந்தால் அந்த அணியின் துடுப்பாட்ட வீரர்கள் சுதந்திரமாக செயற்படமுடியும். தற்போது மக்ரா, ஜிலெஸ்பி, கஸ்பரோவிச் மூவரும் சிறப்பாக செயற்பட்டு வரும் சூழலில் ஒரு துடுப்பாட்ட வீரரை இழக்கவேண்டிய சூழ்நிலையில் உள்ளோம் என்றார்.

12 பேர் கொண்ட அவுஸ்ரேலிய அணி ரிக்கி பொண்டிங் (கப்டன்) அடம் கில்கிறிஸ்ட் (துணை கப்டன்) ஜஸ்டின் லாங்கர், மத்யூ ஹைடன், டேமியன் மார்ட்டின், டரன் லீமன், மைக்கல் கிளார்க், ஷேன் வோர்ன், ஜேசன் ஜிலெஸ்பி, மைக்கல் கஸ்பரோவிச், கிளென் மக்ரா, பிரட் லீ.

## விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கரப்பந்தாட்ட நடுவர் சங்க விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பதிவுசெய்யப்பட்ட 79 அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் யதுகுலசிங் கேட்டுள்ளார்.

# இந்திய டெஸ்ட் அணியில் மீண்டும் இடம் பிடிப்பேன்!

## யுவராஜ்சிங் கூறுகிறார்



(சென்னை)

இந்திய அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான யுவராஜ்சிங் பாகிஸ்தானுக்கு எதிராக கடந்த ஏப்ரல் மாதம் லாகூரில் நடந்த டெஸ்டில் சதம் அடித்த போதும் தற்போது அவர் டெஸ்ட் அணியில் இல்லை.

அவுஸ்ரேலிய அணி இந்தியா வந்தபோது பெங்களூரில் நடந்த முதல் டெஸ்டில் விளையாடினார். சென்னையில் நடந்த 2 ஆவது டெஸ்டில் தொடக்க வீரராக ஆடினார். சென்னை டெஸ்டில் சரியாக ஆடாததால் நாக்பூரில் நடந்த 3 ஆவது டெஸ்டில் 11 பேர் கொண்ட அணியில் வாய்ப்புக் கிடைக்கவில்லை. மும்பையில் நடந்த 4 ஆவது டெஸ்ட் போட்டிக்கான அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

அதைத் தொடர்ந்து தென்னாபிரிக்க தொடர் மற்றும் பங்களாதேஷ் தொடரில் இருந்து நீக்கப்பட்டார்.

இந்த நிலையில் டெஸ்ட் அணியில் மீண்டும் இடம்பெறுவேன் என்று யுவராஜ்சிங் கூறினார்.

தமிழ்நாடு - பஞ்சாப் அணிகள் இடையேயான ரஞ்சி டிரொபி போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடந்து வருகிறது. பஞ்சாப் அணிக்காக விளையாடிவரும் அவா இது தொடர்பாகக் கூறியதாவது-

சர்வதேச போட்டிகளில் விளையாடிய நான் ரஞ்சி டிரொபியில் ஆடுவது சற்று வித்தியாசமானது. ஒவ்வொரு போட்டியும் வெவ்வேறு விதமானதுதான்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான சென்னை டெஸ்டில் தொடக்க வீரராக விளையாடினேன். ஒரு இனிங்ஸில் மட்டும் வாய்ப்பு கிடைத்தது. ஒரு ஆட்டத்தில் வாய்ப்பு கொடுத்து சரியாக ஆடாததற்காக என்னை நீக்கி இருக்கிறார்கள். இது எனக்கு மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. டெஸ்ட் அணியில் மீண்டும் இடம் பெற என்னை தகுதியுடையவன் ஆக்கிக்கொள்வேன்.

நாக்பூர் டெஸ்டில் விளையாடுவேன் என்று எதிர்பார்த்தேன். ஆனால் என்னை நீக்கியது வேதனை அளித்தது.

விளையாட்டில் அணியில் இடம் பெறுதல் - நீக்குதல் என்பது சகஜம்தான். டெஸ்ட் அணியில் மீண்டும் இடம்பெறுவேன் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு யுவராஜ்சிங் கூறினார்.



டாக்கா டெஸ்ட் முன்னதாகவே முடிந்து விட்டதால் நேற்றுமுன்தினம் இந்திய வேகப்பந்து வீச்சாளர் சகீர்கானுக்கு பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வசீம் அக்ரம் பந்துவீச்சு குறித்த நுணுக்கங்களை வழங்கினார்.



லண்டனில் பி.பி.சி விளையாட்டு விருதுகள் வழங்கும் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது. இதில் ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் 2 தங்கம் வென்ற பிரிட்டன் தடகள வீராங்கனை கெலி ஹோம்ஸுக்கு இந்த ஆண்டிற்கான சிறந்த வீராங்கனை விருது வழங்கப்பட்டது.

# சிநேகபூர்வ உதைபந்தாட்டத்தில் பருத்தித்துறை லீக் அணி வெற்றி

லண்டன் செபிற்றன் அணிக்கும், பருத்தித்துறை லீக் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை லீக் அணி 1-0 என்ற கணக்கில் வெற்றிபெற்றது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இந்தப் போட்டி நடைபெற்றது.

இதில் தமிழீழ தேசியக்கொடியை யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார்.

அதைத் தொடர்ந்து அணிகளை அறிமுகம் செய்யும் நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன், வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா மற்றும் லண்டன் தமிழர் விளையாட்டுத்துறை அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் மற்றும் லண்டன் தமிழர் விளையாட்டுத்துறை அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் எட்சன் குணரட்ணம் ஆகியோர் அறிமுகம் செய்து வைத்தனர்.

ஆட்டம் தொடங்கப்பட்டபோது இரு அணிகளும் மிக அமைதியான விளையாட்டைத் தொடர்ந்தபோது பருத்தித்துறை லீக் அணியினர் முதல் 18 ஆவது நிமிடத்தில் கிரிதரன் தட்டிய பந்தை அவ்வணி வீரன் வசந் தலையால் இடித்தபோதும், செபிற்றன் அணியின் கோல் காப்பாளர் சாதுரியமாகத் தடுத்தார்.

பருத்தித்துறை அணியினர் மிகக் கஷ்டப்பட்டு பந்தை அடித்தபோதும் தடுமாற்றமின்றி செபிற்றன் அணி கோல்காப்பாளர் தடுத்தார்.

இருந்தபோதும் முயற்சியைக் கைவிடாது 20 ஆவது நிமிடத்தில் பருத்தித்துறை லீக் அணி வீரர்கள் கிரிதரன் தட்ட அதை மேலும் சசிகுமார் தட்டிக்கொடுக்க அதே அணி வீரன் யோகன் பந்தை உருட்டி மிக அற்புதமான கோலைப் போட்டார். இதனால் பருத்தித்துறை லீக் அணி 1-0 என்ற கோல் கணக்கில் இடைவேளைக்கு முன்னர் முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தபோது இரு பக்கமும் மிகவும் விறுவிறுப்பாக ஆடிக் கொண்டிருந்தனர். பருத்தித்துறை லீக் அணியினர் 21 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை கோலாக்கத் தவறிவிட்டனர்.

இதனால் பருத்தித்துறை லீக் அணியினர் லண்டன் செபிற்றன் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து வெற்றியீட்டினர்.

(12)

கிழே தரப்பட்டுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள எண்கள் குறித்து ஒரு குறியீட்டு முறையை எழுதப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து இலக்கம் 21 தொடக்கம் 24 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.



21. * △ + □ (△•) = ........... - .......... =

22. □ (△•) - * □ = ........... + .......... =

23. ○ ▯ x ⊙ = ........... x .. ........ =

24. ○ (▭•) ÷ ▯ = ........... + .......... =

25 ஆம் 26 ஆம் வினாக்களில் உள்ள சொல்வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல் வரிசையின் கீழே கோடு இடுக.

25. i) வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, செய்தி
   ii) கத்தரி, பாசல, மிளகாய், வெண்டி
   iii) ஞாயிறு, சூரியன், சந்திரன், வெய்யோன்

26. i) கிராம், கிலோகிராம், லீற்றர், மில்லிகிராம்
   ii) கிளித்தட்டு, தரம், எல்லே, துடுப்பாட்டம்
   iii) கதவு, கட்டில், மேசை, கதிரை

27 அம் 28 ஆம் வினாக்கள் பின்வரும் கூடுகளில் உள்ள எழுத்துக்களையும், இலக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டவை.

| | | | | |
|---|---|---|---|---|
| க | ச | 4 | ல | த |
| த | பா | வ | 5 | த |
| க | த | வா | தி | யா |
| ய | யி | கீ | தா | 3 |
| க | கி | யி | தா | பா |
| பா | க | தி | யு | ம் |

27. இக்கூண்டுக்களில் உள்ள எழுத்து "க" வின் எண்ணிக்கை எழுத்து, "த" வின் எண்ணிக்கையில் குறைந்த தாயின் இலக்கம் 5 உள்ள கூட்டில் X ஐ இடுக. அவ்வாறு இல்லையெனில் இலக்கம் 3 உள்ள கூட்டில் X ஐ வரைக.

28. கீழே காணப்படும் உருவை அவதானித்து 29 முதல் 33 வரை உள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.




29. சதுரத்துக்கும், வட்டத்துக்கும் உரிய எண்கள் யாவை?
..........................................

30. வட்டத்திற்கு உரிய எண் யாது?
..........................................

31. முக்கோணத்திற்கு உரிய எண் யாது?
..........................................

32. சதுரத்திற்குரிய எண் யாது?
..........................................

33. சதுரம், வட்டம், முக்கோணம் ஆகியவற்றில் உள்ள முழு எண்களின் கூட்டுத்தொகை யாது?
..........................................

பின்வருவனவற்றை பிழையாயின் x எனவும் சரியாயின் √ எனவும் எழுதுக.

34. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையும். ( )

35. முனிவர்கள் வாழும் இடம் ஆச்சிரமம். ( )

36. அடித்துச் செல்லும் நீரில் நுளம்பு மிக வேகமாய் பரவும். ( )

37. உருளைக்கிழங்கு அதிகளவு புரதம் கொண்ட உணவுப்பொருள் ஆகும். ( )

38 ஆம் 39 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் நான்கு உருக்கள் உள்ள ஐந்தாம் இடத்திற்குப் பொருத்தமான உருவைத் தரப்பட்டுள்ள உருக்களிலிருந்து தெரிவு செய்து, அதற்குரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

38.




39.




T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd
ஆசிரிய ஆலோசகர் மேல்மாகாணம்

இங்கே மடிக்கவும்





மாணவர் மலர்

## மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2004

● கடந்த வருடம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற உங்களுக்குத் தெரியுமா? அறிவுக் களஞ்சியப் போட்டியில் வெற்றிபெற்ற, கண்டி இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் பெற்ற புள்ளிகள் - கீழே வரைபு காட்டுகிறது.

| பெயர் | பெற்ற புள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|
| தர்சினி | 卌 卌 卌 卌 II | 22 |
| கீதா | | 25 |
| தருமிளா | 卌 卌 卌 卌 卌 卌 | 30 |
| மேனகா | 卌 卌 卌 | 15 |
| மைதிலி | 卌 卌 卌 卌 II | 22 |

i. கீதா பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கையை வரைந்து காட்டுக. ..........................................

ii. அதிக புள்ளிகள் பெற்ற மாணவி யார்?
..........................................

iii. சமமான புள்ளிகள் பெற்ற இரு மாணவிகளும் யாவர்?
..........................................

iv. கண்டி இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் பெற்ற மொத்தப் புள்ளிகள் எத்தனை?
..........................................

v. குறைந்த புள்ளிகள் பெற்ற மாணவிக்கும் அதிக புள்ளிகள் பெற்ற மாணவிக்கும் இடையில் உள்ள புள்ளி வித்தியாசம் எவ்வளவு?
..........................................

vi. பெற்ற புள்ளிகள் அடிப்படையில் அவர்களின் பெயர்களை ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தி எழுதுக
1. ................ 2. ................
3. ................ 4. ................
5. ................

vii. இந்தப் போட்டிகள் ஆரம்பிக்கும்போது நேரம் 9.20 ஆகும். நிறைவுறும் நேரம் 10.45 ஆயின், போட்டி முடிவடைய எவ்வளவு நேரம் எடுத்தது?
..........................................

viii. பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொல் எழுதுக.
1. வருடம் : ..........................
2. வெற்றி : ..........................

ix. போட்டியில் என்ற சொல்லின் பன்மைச் சொல்
..........................................

x. ஆண்பால் சொற்களில் எழுதுக.

1. மகளிர் :..........................................
2. மாணவிகள் : ..........................................

● கீழே 'அ' பகுதியில் உள்ள உபகரணங்கள் பெயர்களை எவ்வேலைகளுக்குப் பயன்படுத்தலாம் என்பதை 'ஆ' பகுதியிலிருந்து தெரிவு செய்து 'இ' பகுதியை எழுத்தை சதுரத்தினுள் எழுதுக.

| அ | ஆ | இ |
|---|---|---|
| 1. தொலைநோக்கி | ..... | A. தொலைவில் உள்ள ஒருவரிடம் பேசுவதற்கு. |
| 2. ஏர் | ..... | B. பலகை அறுப்பதற்கு. |
| 3. மழைமானி | ..... | C. சங்கீதம் வழங்குவதற்கு. |
| 4. தூக்குக் குண்டு | ..... | D. பெரிதாக்கப் பார்ப்பதற்கு. |
| 5. தொலைபேசி | ..... | E. வயல் உழுவதற்கு. |
| 6. தாளம் | ..... | F. மழையை அளப்பதற்கு. |
| 7. எக்ஸ்றே இயந்திரம் | ..... | G. உணவைப் பொரிப்பதற்கு. |
| 8. வாள் | ..... | H. தாளத்தைக் காப்பதற்கு. |
| 9. வீணை | ..... | I. உடம்பின் உற்பத்தியை பார்ப்பதற்கு. |
| 10. தொலைக்காட்சி | ..... | J. காற்று வீசும் திசை அறிய |
| 11. தாச்சி | ..... | K. துளை இடுவதற்கு. |
| 12. திசை அறி கருவி | ..... | L. ஒலி, ஒளி நிகழ்ச்சிகள் பார்க்க. |

● பின்வரும் தமிழ் சொற்களை சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் எழுதுக.

| தமிழ் | சிங்களம் | ஆங்கிலம் |
|---|---|---|
| பாடசாலை<br>வகுப்பு | 1..............<br>2. ............ | 1............<br>3............ |

கொடுக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள சில சொற்கள் எழுத்துப் பிழைகள் உள்ளன. அவற்றைத் தெரிவு செய்து சரியான சொல்லைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

நாம் கல்விச் சுற்றுளா சென்றவேளை அங்கு போயிருந்தோம். துாரத்தில் நின்று பார்த்த போது ஒரு பெரிய சிங்கம் படுத்திருப்பது போலக் காட்சியழித்தது. அருகில் சென்ற போது தான் உன்மையான அமைப்பைக் கண்டு கொண்டோம். நான் ஆசிரியரின் கையைப் பிடித்துக் கொண்டு மழையில் ஏறினேன்.

1. .......................... 2. ..........................
3. .......................... 4. ..........................
5. .......................... 6. ..........................

● நுளம்புகள் எவ்வாறு பெருக்கமடைகின்றன என்பது பற்றிச்

## மாணவர் மலர் - ii

சில கட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்கு படுத்தி 1, 2, 3, 4, 5, 6 என்னும் இலக்கங்களைக் கொண்டு பூர்த்தி செய்க.

1. ☐ முட்டையிலிருந்து குடம்பி வெளியேறும்.
2. ☐ செட்டை கழற்றி கூட்டுப்புழுவாகும்.
3. ☐ பெண் நுளம்பு நீரில் முட்டை இடும்.
4. ☐ கூட்டுப்புழு கவசம் வெடித்து நுளம்பாகும்.
5. ☐ மூன்று நாட்களின் பின் முட்டை வெடிக்கும்.
6. ☐ குடம்பி நீரில் உள்ள நுண்ணங்கிகளை உண்ணும்.

● பின்வரும் சொற்களைப் பிரித்தும், சேர்த்தும் எழுதுக.

1. மரணமடைந்தார் : ..............................
2. வாரியணைத்தார் : ..............................
3. கூடி + இருந்தார்கள் : ..............................
4. கோபம் + அடைந்தது : ..............................
5. கல் + எறிந்தான் : ..............................

சுருக்கமான விடை தருக.




1. இந்தச் செவ்வக வடிவத்தின் சுற்றளவு யாது?

..............................



2. இந்த வட்டங்களின் நிழற்றப்பட்டுள்ள பின்னங்களை எழுதுங்கள்

1..............................
2..............................
3..............................

3. அப்பின்னங்களை ஏறுவரிசைப்படுத்துங்கள்

..............................

4. $12.5 + 4.87 =$ : ..............................

5. கீழே எண்சட்டங்களில் காட்டப்பட்டுள்ள எண்களை இலக்கங்களில் எழுதுக.




6. அவ்வெண்களைச் சொற்களில் எழுதுக.
7. 1 நாள் 6 மணித்தியாலம் எத்தனை மணித்தியாலம்?

● கீழே கொடுக்கப்பட்டுள்ள தொடர்களை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தனிச் சொல்லைக் கூட்டுக்குள் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

1. தாய், தந்தை, ஆசான், அண்ணன், அரசன், என்போர்
..............................
2. நான்கு புறங்களாலும் கடலால் சூழப்பட்ட நிலப்பகுதி
..............................
3. விபத்துக்குள்ளாகிய ஒருவருக்கு உடனடியாக அளிக்கப்படும் சிகிச்சை
..............................
4. மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன
..............................
5. இருபத்தைந்தாவது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா (ஐங்குரவர், ஐம்புலன், முதலுதவி, தீவு, வெள்ளிவிழா)
..............................

- வகைப்படுத்துக (யானை, கிளி, சிங்கம், புலி, மாடு, நாய், முயல், காகம், கரடி)

| தாவரம் மட்டும் | மாமிசம் மட்டும் | தாவரம், மாமிசம் இரண்டும் |
|---|---|---|
| 1.............. | 2.............. | 3.............. |
| 1.............. | 2.............. | 3.............. |
| 1.............. | 2.............. | 3.............. |

- நான் பாடசாலைக்குச் சென்றபோது என்னும் தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய், பயனிலைகள் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

..............................
..............................
..............................

இங்கே மடிக்கவும்

## மாணவர் மலர் - iii

I கீழே உள்ள சொற்களில் வித்தியாசமான சோடி சொற்களின் கீழ் கோடிடுக.

1. i) பகலவன் - ஞாயிறு
   ii) நிசி - இரவு
   iii) உணவு - ஊன்
   iv) வெற்றி - ஜெயம்
2. i) இலங்கை - இந்தியா
   ii) இந்தியா -சேலம்
   iii) கனடா - அமெரிக்கா
   iv) சீனா - பீகிங்
3. i) பூனை + எலி ii) ஆடு - பூச்சி
   iii) சிங்கம் - மாமிசம் iv) பாம்பு - தவளை

II. பின்வரும் ஆங்கில எழுத்துக்களை அகர வரிசையில் எழுதினால் இறுதியில் வரும் எழுத்து.

4. i) J ii) M iii) G iv) H v) Q

III. ஒரு கல்லூரியில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப்போட்டியில் கண்டு கொண்டவற்றைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

5. i) கரம் ii) நீளம் பாய்தல்
   iii) கரண்டியோட்டம் iv) மாட்டுவண்டி ஓட்டம்
   v) கரப்பந்தாட்டம் vi) தடையோட்டம்
6. தேசியக் கொடியில் உள்ள நிறங்களில் அல்லாதது
   i) சிவப்பு ii) நாவல் iii) செம்மஞ்சள் iv)பச்சை
7) கமக்காரனுக்கு உதவும் பிராணிகளில் ஒன்று
   i) வெட்டுக்கிளி ii) நத்தை
   iii) மண்புழு iv) எறும்பு
8) பூக்காத மரங்களில் ஒன்று
   i) நத்தார் மரம் ii) தென்னை மரம்
   iii) ஊமத்தைச் செடி iv) செவ்வரத்தை
9. வைத்தியசாலையில் எந்நேரமும் இருப்பவர்கள்
   i) வைத்தியர்கள் ii) நோயாளிகள்
   iii) தாதியர்கள் iv) வேலையாட்கள்
10) துளைக் கருவிகளில் ஒன்று
   i) யாழ் ii) உடுக்கு iii) நாதஸ்வரம் iv) தம்புரா

IV. இலக்கம் 11 தொடக்கம் 13 வரையுள்ள வினாக்களில் ஒரு கல்வீடு கட்டுவதற்கு சிறந்த இடத்தைத் தெரிந்து எடுத்தார் மாலா. அதில் வீடு கட்டுவதற்கு சிறந்த இடம் என தெரிந்தது கீழ்வருவனவற்றில் பொருத்தமான வாக்கியத்தை தெரிந்து எழுதுக.

- நிலம் சுடுகாட்டுக்கு அருகில் இருத்தல் வேண்டும்.
- நிலம் மேட்டு நிலமாக இருத்தல் வேண்டும்.
- நிலம் சதுப்பு நிலமாக இருத்தல் வேண்டும்.
- நன்னீர் வசதியுள்ள நிலமாக இருத்தல் வேண்டும்.
- நிலம் நீரை உறுஞ்சும் தன்மையுள்ளதாக இருத்தல் வேண்டும்.

V. பின்வரும் உருவின் நான்கு உருக்கள் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையன. அதன்படி தொடர்பில்லாத உருவைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.




VI. பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.

14. 24 ஐ உரோமன் எண்குறியில் எழுதுக.
..............................
15. 100 கிராம் கரட்டின் விலை ரூபா. 6.00 எனின் 500 கிராம் கரட்டின் விலை யாது?
..............................
16. இருவித்திலைத் தாவரம் இரண்டு தருக.
..............................
17. மருந்துக்குப் பயன்படும் இலைவகை இரண்டு தருக.
..............................
18. அறுபதாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா
..............................
19. செவ்வகமொன்றின் நீளம் 5 Cm அகலம் 3Cm அதன் சுற்றளவு யாது?
..............................

20. கீழே தரப்பட்டுள்ள A,B,C,D ஆகிய நான்கு உருக்களில் சம அளவான பரப்பளவைக் கொண்ட இரு உருக்களைத் தெரிவு செய்து அதனை எழுதுக.



# க.பொ.த சாதாரணதரம் மாதிரிப் பரீட்சை

## பகுதி I

## நீருயிர் வளத்தொழில் நுட்பம்

மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. இலங்கையின் மீன்பிடி விரிவாக்க மாவட்டங்கள் எத்தனை?
   i) 15 ii) 7 iii) 24 iv) 25

2. மீன்களில் உடலில் தொங்கியபடி உணவைப் பெறும் விலங்கு?
   i) கடல் முள்ளி ii) நட்சத்திர மீன்
   iii) சப்பாத்து மீன் iv) சிப்பி

3. இலங்கைக்குரிய கடற் பிரதேசத்தின் (பொருளாதாரக் கடல் வளம்) அளவு எவ்வளவு?
   i) 30000 $km^2$ ii) 63 705 $km^2$
   iii) 2905 $km^2$ iv) 517000 $km^2$

4. ஏகார் தயாரிப்பிற்கு பயன்படும் அல்கா வகை?
   i) சாகாஸம் ii) உல்வா iii) கிரிசிலேறியா iv) கெலிமெடா

5. தாவர இனப் பெருக்கத்தின் போது, தாய்ச் செடியிலிருந்து இனம் பெருகி நடைபெறும் வளர்ப்பு எவ் விசேட சூழலில் நிகழ்கிறது?
   i) பாலை நிலத்தில் ii) கண்டல் நிலத்தில்
   iii) கடனீரேரி iv) சேற்று நிலத்தில்

6. தற்போது இலங்கையில் சாயம் தயாரிப்பதற்குப் பயன்படும் அல்கா வகை
   i) சாகஸம் ii) உல்வா iii) கிரசிலேனியா iv) படையினா

7. மருத்துவத் துறையில் வன்ரேச் துணியில் பூசப்படுகின்ற மருந்து வகையானது எந்த அல்காவில் இருந்து பெறப்படுகின்றது.
   i) ரெபினேறியா ii) லமினேறியா
   iii) ஏன்ரறோ மேபா iv) ஜெலினேறியா

8. இலங்கை மக்களின் மீன் நுகர்ச்சி அண்ணளவாக ஆண்டுக்கு எத்தனை கிலோகிராம்
   i) 8 ii) 10 iii) 15 iv) 21

9. உணவு சமிபாடடைவதற்கு உதவும் இரசாயனப் பொருள் இருப்பது.
   i) நொதியங்களில் ii) கொழுப்புக்களால்
   iii) நீரில் iv) விலங்குப் புரதங்களில்

10. நீர் மானி பயன்படுத்தப்படுவது நீரின் எவ் இயல்பை விடுவிப்பதற்கு.
    i) அடர்த்தியை ii) தன்னீர்ப்பை
    iii) உவர்ப்புத் தன்மை iv) வளியை

11. முழு ஆயுட் காலத்தின் போது பிளாந்தனாக வாழும் அங்கி எது?
    i) நிலப் பச்சை அல்கா ii) பச்சை அல்கா
    iii) கபில அல்கா iv) சிப்பி முட்டை

12. பின்வரும் எநதப் பிளாந்தன் நீரில் ஆழங்கூடிய படைகளிலும், ஆழம் குறைந்த படைகளிலும் வாழ்கின்றது?
    i) தப்னியா ii) கிரத்தேசியா
    iii) தயற்றம் iv) சிலெந்தரேற்றா

13. பின்வரும் மீன்களில் கொலசுத்திரோல் குறைவாக உள்ள மீன்?
    i) சூரை ii) கிளவாலை iii) சுறா iv) கும்பளா

14. வட.கிழக்கு பருவகாற்று மழை ஆரம்பமாகும் மாதம் எது?
    i) செப்ரெம்பர் ii) ஜனவரி iii) யூலை iv) ஏப்பிரல்

15. குளிர்ச்சியின்போது இருக்க வேண்டிய வெப்பநிலை வீச்சு
    i) $-10^0$ C இருந்து - 200 C வரைக்கும்
    ii) $-15^0$ C இருந்து - 200 C வரைக்கும்
    iii) $0^0$ C இருந்து - 60 C வரைக்கும்
    iv) $-2^0$ C இருந்து - 300 C வரைக்கும்

16. பருத்தித்துறை இருப்பது இலங்கையின்
    i) வட கிழக்கில் ii) வடமேற்கில்
    iii) தெற்கில் iv) கிழக்கில்

17. நெய்த்தோலியின் வாலின் வடிவத்தைக் காட்டும் உருவம் யாது?




i) A ii) B iii) C iv) D

உலகிலுள்ள கடலட்டை இனங்கள் எத்தனை?
i) 300 ii) 500 iii) 610 iv) 900

19. உயிர் மீனில் எத்தனை வீதம் நீர் உண்டு?
    i) 15% ii) 60% iii) 75% iv) 80%

20. இலங்கை எந்த நெடுங்கோடுகளுக்கிடையே இருக்கின்றது?
    i) 5' - 10' ii) 20' - 35' iii) 60' - 70' iv) 79' - 82'

21. ரீயூனா (சூரையின்) செட்டையின் நிறம் என்ன?
    i) வெள்ளை ii) கறுப்பு iii) மஞ்சள் iv) பச்சை

22. மிகச் சிறிய செதில்களைக் கொண்ட ஒரு மீன்வகை எது?
    i) முரல் ii) திருக்கை iii) திலாப்பியா iv) சுறா

23. இழுவைப் படகு மூலம் (ரோலர்) வலை இழுத்துச் செல்லப்படுவதைக் குறிக்கப் பயன் படுத்தும் குறியீடு எது?



24. மீனில் எத்தனை இதயவறைகள் காணப்படும்
    i) ஒன்று ii) இரண்டு iii) மூன்று iv) நான்கு

25. பழுதடைந்த உணவை அதிகம் விரும்பும் கடலுயிரினம் எது?
    i) கடலட்டை ii) நண்டு iii) திருக்கை iv) இறால்

26. இலங்கையின் கரையோரப் பாதுகாப்புச் சட்டம் எத்தனையாம் அண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது?
    i) 1979 ஆம் ஆண்டு ii) 1970 ஆம் ஆண்டு
    iii) 1980 ஆம் ஆண்டு iv) 1981 ஆம் ஆண்டு

27. அல்பிசியா மரத்தின் வர்த்தகப் பெயரைக் குறிப்பிடுக?
    i) சிறிஸ் ii) மரக்காஸ் iii) அல்பிஸ் iv) றபிஸ்

28. இலங்கையில் முத்துச் சிப்பிகளையும், முருங்கைக் கல்லினுள் வாழும் உயிரினங்களையும் உண்ணும் உயிரினமாகக் கருதப்படும் உயிரினம் எது?
    i) திலாப்பியா ii) நண்டு
    iii) கடலட்டை iv) நட்சத்திர மீன்

29. கடற்தொழில் திணைக்களம் இலங்கையில் அமைக்கப்பட்ட ஆண்டு எது?
    i) 19 A 40 ii) 1951 iii) 1955 iv) 1960

30. எமது நாட்டைச் சுற்றி வரவுள்ள கடற்பிரதேசத்தில் நாளொன்றில் ஏற்படும் வற்று பெருக்குகளின் எண்ணிக்கை எத்தனை.
    i) 1 பெருக்கு 1 வற்று ii) 1 பெருக்கு 2 வற்று
    iii) 2 பெருக்கு 2 வற்று iv) 2 பெருக்கு 1 வற்று

## பகுதி II

1. i) கடலில் நடைபெறும் மேலெழல் எனும் பௌதீகச் செயற்பாடு கடல் வாழ் அங்கிகளில பல்வேறு செல்வாக்குகளை ஏற்படுத்துகிறது. எவ்வா றெனனும் இலங்கையைச் சூழவுள்ள கடல் வலயத்தில் இவ்வாறான செயற்பாடு எனக் கூறப்படுகின்றது.

i) மேலெழல் எவ்வாறு ஏற்படுகின்றது எனக் சுருக்கமாக விளக்குக?

ii) இந்தச் செயற்பாடு மீன் வளத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என விளக்குக?

iii) இலங்கையைச் சூழவுள்ள இந்து சமுத்திரப் பகுதியை வளம் படுத்துவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டைச் சுருக்கமாக விளக்குக.

2. விரைவாகப் பழுதடையக் கூடிய தன்மையைக் கொண்ட இயற்கையின் வளமாகிய மீனை சரியாக கையாள்கை செய்வதன் மூலம் பழுதடைதலைக் குறைத்துக் கொள்ளலாம்.

i) மீன்கள் பழுதடையம் பிரதான முறைகளைக் குறிப்பிடுக?

ii) மீன்கள் பிடிக்கப்பட்ட உடனேயே அவற்றை பழுதடையாது பாதுகாப்பதற்கு மேற் கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் நான்கு தருக?

iii) சந்தையிலுள்ள மீன்கள் பழுதடையவில்லை என முடிவு செய்யப் பயன்படுத்தக் கூடிய இயல்புகள் 4 தருக?

iv) மீன்களை நீண்டகாலம் பேணுவதற்கு கைக்கொள்ளக் கூடிய முறை மூன்று தருக?

3. மீன் வளமானது கடல் வாழ் உயிரின வளங்களில் சிறந்த வளமாகக் கருதப்படு கின்றது. இந்தரீதியில்

i) மீனின் புற அமைப்பினை (வெளித்தோற்றம்) வரைந்து அதன் ஒவ்வொரு பகுதிகளையும் குறித்துக் காட்டுக?

ii) அவற்றினுள் அடங்குகின்ற ஒவ்வொரு பகுதிகளையும் விபரித்து எழுதுக?

4. மீன்வளம் தவிர்ந்த விடத்து கடல் நீரிலும் கடலின் அடியிலும் கடற்கரையிலும் பெரும் தொகையான இயற்கை வளங்கள் காணப்படுகின்றன. இவ் வளங்களை வர்த்தக ரீதியிலும் பெற்றுக் கொள்வதற்காக உலக மக்கள் தற்போது அதிக கவனம் செலுத்துகின்றனர்.

i) கடல் நீரில் கரைந்துள்ள இரசாயனப் பொருள் எது.

ii) திமிங்கிலத்திலிருந்து பெறப்படும் பெறுமதிமிக்க இரசாயனப் பொருட்களைக் குறிப்பிடுக?

iii) கடற்கரையிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு வகையான வளங்களைக் குறிப்பிடுக?

iv) சுறா மீனிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த ஓர் உற்பத்தியைக் குறிப்பிடுக?

அ.அருள்நேசன் (Dip. in Fisheries)

# க.பொ.த சாதாரணதரம் மாதிரிப் பரீட்சை

## பகுதி I

## விஞ்ஞானமும் தொழிநுட்பவியலும்

♦ சரியான விடையைத் தெரிவுசெய்து புள்ளடித்தாளில் அடையாளமிடுக.

01. சர்வதேச நியம அலகாக (SI unit) யூல் (J) என்பதைப் பயன்படுத்த முடியாத கணியம்.
1. வேலை 2. வலு 3. வெப்பம் 4. சக்தி

02. $25_{13}A$ என்ற அணுவின் அயனின் இலத்திரன் நிலையமைப்பிற்கு சமமான இலத்திரன் நிலையமைப்பைக் கொண்டிராதது.
1. $Mg^{2+}$ 2. Ne 3. CT 4. $O^{2}$

03. மனித உடலில் வளர்ச்சிக்கு ஓமோனைச் சுரக்கும் சுரப்பி
1. அதிரீனற் சுரப்பி 2. கேடயப்போலிச்சுரப்பி 3. கபச்சுரப்பி 4. சதையி

04. எமதுநாவில் இனிப்பை நன்றாக உணரும் வாங்கிகளைக் கொண்ட பகுதி
1. அடிப்பகுதி 2. நுனிப்பகுதி 3. ஓரங்கள் 4. நடுப்பகுதி

05. புறச்சூழலிலும், அகச்சூழலிலும் ஏற்படும் மாற்றங்களை மனிதனுக்கு அறிவிப்பது.
1. குருதிச்சுற்றோட்டத்தொகுதி 2. நரம்புத்தொகுதி
3. சமிபாட்டுத்தொகுதி 4. அகஞ் சுரக்கும் தொகுதி

06. ஒளிகாலும் இருவாயின் (LED) நியமக்குறியீடு
1. 2. 3. 4.



07. பின்வருவனவற்றுள் வேறுபட்ட பிணைப்பைக் கொண்டுள்ளது.
1. $Na_2Co_3$ 2. Kcl 3. $MgCl_2$ 4. $CH_4$

08. மேற்படி வரைபில் சைக்கிள் ஒன்றின் பிரயாணம் விபரிக்கப்பட்டுள்ளது. சைக்கிளில் சென்ற தூரம் இடப்பெயர்ச்சி முறையே
1. 30m,30m 2. 30m,60m
3. 30m,0m 4. 30m,15m




09. படத்தில் காட்டப்பட்ட சுற்றில் A யினூடாக 6V ஆடலோட்டம் வழங்கப்படும் போது. B இல் பெறக்கூடிய மின்னோட்டம்.
1. 6Vஇலும் கூடிய நேரோட்டம் 2. 6Vஇலும் குறைந்த நேரோட்டம்.
3. 6Vஇலும்கூடிய ஆடலோட்டம். 4. 6Vஇலும் குறைந்த ஆடலோட்டம்.

10. தனிக்கம்பித் தொகுதியில் சுமையை 1m தூரம் உயர்த்துவதற்கு இழை எவ்வளவு தூரம் இழக்கப்படவேண்டும்.
1. 2m 2. 1m 3. 8m 4. 4m

11. தரப்பட்ட மின்சுற்றில் A மானியின் வாசிப்பு யாது?
1. 2A 2. 1A 3. $^1/_2$A 4. $1^1/_2$A




12. கனிய எண்ணெய் பயன்படும் உற்பத்தி எனக்கூறமுடியாதது.
1. பங்கசு கொல்லி தயாரிப்பு 2. பொலித்தீன் தயாரிக்க
3. சீமெந்து தயாரிக்க 4. P.V.C தயாரிக்க

13. இறப்பர் வல்கனைஸ்ப்படுத்தும் போது கந்தகத்துக்குப் பதிலாகச் சேர்க்கப்படும் வேறுபொருள்.
1. இரும்பு 2. அலுமினியம் 3. செலெனியம் 4. காபன்

14. ஒரு இறப்பர் மரத்தில் இருந்து எவ்வளவு காலத்துக்கு பால்பெறமுடியும்.
1. 1வருடம் 2. 12வருடம் 3. 24வருடம் 4. 1மாதம்.

15. பூவுசிச் செருகி ஒன்றின் அமைப்பை படம் காட்டுகிறது. A.B.C ஆகிய வடங்கள் முறையே சரியாகக் குறிப்பது.
1. உயிர்க்கம்பி, நடுநிலைக்கம்பி, புவிக்கம்பி
2. புவிக்கம்பி, நடுநிலைக்கம்பி, உயிர்க்கம்பி
3. புவிக்கம்பி, உயிர்க்கம்பி, நடுநிலைக்கம்பி
4. நடுநிலைக்கம்பி, புவிக்கம்பி, உயிர்க்கம்பி




16. புவியின் மின் அழுத்தப்பெறுமானம் யாது.
1. 0V 2. 10000V 3. V 4. கூறமுடியாது.

17. ஆடலோட்டத்தை நேரே ஓட்டமாக மாற்றுதில் பயன்படும் ஒருசாதனம்
1. தடையி 2. இருவாயி 3. மூவாயி 4. கொள்ளளவி

18. பஸ்கால் என்னும் அலகை சரியாகத் தருவது
1. Nm 2. $Kgm^{-3}$ 3. $Nm^{-2}$ 4. $Nm^{-1}$

19. பின்வருவனவற்றில் நரம்புத்தொகுதியின் ஆக்கக்கூறு.
1. நரம்புக்கலம் 2. நரம்பு நார்கள் 3. மூளை 4. மூளி

20. குருதியானது குருதிக்குழாய்களினுள் குறைவதைத் தடுக்க உதவுவது.
1. துரொம்பின் 2. சோடியம் ஒட்சலேற் 3. எப்பாரின் 4. அயடீன்

21. செயற்கைப் பிரதியீட்டுப் பதார்த்தமானது பொலி புரோப்பீன் பொறிமுறை அலகு எது.

1. [F F / I I / C C / I I / F F] 2. [H C1 / I I / C C / I I / H H] 3. [H $CH_3$ / I I / C C / I I / H H] 4. [H H / I I / C C / I I / H H]

22. "செஸ" விளையாடும் ஒருவர் ஓட்டக்காயை மறுநிலைக்கு நகர்த்த உதவுவது
1. மூரி 2. மூளையம் 3. நீள்வளைய மையவிளையம் 4. முன்நான்

23. நாடி ஒன்றில் இருந்தும், நாளத்தில் இருந்தும் குருதியைப் பெறும் அங்கம்.
1. நுரையீரல் 2. ஈரல் 3. சிறுநீரகம் 4. தலை

24. அருகில் தரப்பட்டிருப்பது ஒரு தாவர அங்கத்தின் குறுக்குவெட்டு முகம் ஆகும். இந்தத் தாவர அங்கமானது பெரும்பாலும்
1. இருவித்திலைத்தண்டு 2. ஒருவித்திலைத்தண்டு
3. இருவித்திலைவேர் 4. ஒருவித்திலை வேர்



25. 

விற்தராசில் கட்டித்தொங்கவிடப்பட்டுள்ள. மரக்குற்றி நீரில் இருக்கும் ஆரம்ப நிலையைப் படம் காட்டுகிறது. இந்த நிலையில் இருந்து குற்றி வெளியே எடுக்கப்படும்போது விற்தராசில் ஏற்படும் மாற்றத்தை சரியாகக் காட்டும் வரைபு எது. (வாசிப்பு எதிர்நிலைக்கான வரைபு)




26. பின்வரும் கதிர்ப்படங்களில் பிழையானது.




27. குருதியில் குளுக்கோசு மட்டத்தை மாறாது பேணுவது
1. இன்சுலின் 2. தைரொட்சின் 3. அதிரீனலின் 4. ST.H

28. கண்பரிசோதனை மருத்துவர் வழங்கிய மருத்துவச்சிட்டை வருமாறு இந்தச் சிட்டை தொடர்பான சரியான கூற்று.

| D | D |
|---|---|
| +2.5 | +2.5 |

1. இவர் கிட்ட பார்வை குறைபாடுடையவர்
2. இவர் நீள் பார்வை குறைபாடுடையவர்
3. இதன் குவியத்தூரம் 2.5 cm ஆகும்.
4. இதன் வலு 40 D ஆகும்.

29. உயிர்க்கோள ஒழுங்கமைப்புமட்டம் வருமாறு.
தனியன் → இனம் → சாகியம் உயிர்க்கோளம் XY இல் இடம் பெற வேண்டியவை
1. குடித்தொகை, சூழற்தொகுதி 2. இழையம், தொகுதி
2. சூழற்தொகுதி, குடித்தொகுதி 3. தொகுதி, இழையம்

30. போக்சைற் ஏமற்றைற்று என்பவற்றிலிருந்து பெறப்படும் உலோகங்கள் முறையே
1. Fe, Al 2. AI,Fe 3. Zn, Pb 4. Pb,Zn

31. பின்வரும் காபனேற்றுக்களில் வெப்பப் பிரிகையடையக் கூடிய காபனேற்று
1. $Li_2 Co_3$ 2. $K_2 Co_3$ 3. $Na_2 Co_3$ 4. Be $Co_3$

32. 116 g $C_4H_{10}$ பூரண தகனத்திற்கு உட்பட்டால் வளியுடன் சேரும் காபனீரொட்சைட்டின் திணிவு
(C-12, H - 1, 0-16)
1. 3.69g 2. 11.6 3. 352g 4. 176 g

33. வளியில் எரிக்கப்பட்டால் மூல இயல்புகளைக் கொண்ட வெள்ளை நிறத்தூளைப் பெற்றுத் தரக்கூடியது.
1. Cu 2. Al 3. Fe 4. mg

34. ஒலியின் உரப்பை அளக்கப் பயன்படும் கருவி
1. சுரமாணி 2. ஒலிமட்ட மாணி 3. சைலபோன் 4. இசைக்கலை

35. முதலுற்பத்தியாக்கிகள் எனக் கருதப்படுவது.
1. உக்கிய மரத்தில் வளரும் காளான் 2. குளத்திலுள்ள தாமரை நாற்றுகள்
2. நெல் வயலில் உள்ள அந்துப் பூச்சி 4. பற்றீரியாக்கள்

36. இயற்கை வட்டங்களை பாதிக்கும் காரணி அல்லாதது.
1. சனத்தொகை அதிகரிப்பு
2. காடுகளை அழித்தல்
3. இரசாயன வளமாக்கிகள் கொண்டு பயிரிடல்
4. மின்சாரத்தைக் கொண்டு தொழிற்சாலைகளை இயக்கச் செய்தல்

37. இரத்தினக் கற்களின் நிற வேறுபாட்டுக்குக் காரணம் யாது
1. பட்டை தீட்டல் 2. நிறம் பூசுதல்
3. உரோஞ்சுதல் 4. அவற்றில் காணப்படும் உலோகச் சேர்வைகள்

38. தண்டவாளத்தின் கீழ் சிலிப்பர் கட்டைகள் இடுவதன் நோக்கம்
1. தண்டவாளம் உயர்ந்திருப்பதற்கு
2. தண்டவாளம் விலகாமலிருப்பதற்கு
3. பரப்பைக் கூட்டி அமுக்கத்தைக் குறைப்பதற்கு
4. புகை வண்டி தடம் புரளாமல் இருப்பதற்கு

39. அருகிலுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ள மின் சுற்றில் இணைக்கப்பட்ட தடைகளின் சமானத்தடை யாது?
1. $R_1+R_2+R_3$ 2. $\frac{R_1+R_2}{R_3}$ 3. $\frac{R_1+R_2+R_3}{R_1+R_3}$ 4. $\left[\frac{R_1+R_2+R_3}{R_2}\right]\frac{+R_1}{R_3}$

40. நுளம்புகளை முற்றாக அழிப்பதற்கு பொருளாதார சுகாதார காரணிகளோடு சம்பந்தப்பட்ட ஒரு நிறுவனத்தால் மேற்கொள்ள வேண்டிய முறை யாது?
1. சதுப்பு நிலங்களின் மேல் பூச்சி கொல்லிகளை விசிறுதல்.
2. சதுப்பு நிலங்களின் மேல் எண்ணெய் விசிறுதல்.
3. நுளம்புக் குடம்பிகளையும், கூட்டுப்புழுக்களையும் உண்ணும் மீன்கள் வளர்த்தல்
4. நுளம்பின் மேல் பூச்சி கொல்லிகளை விசிறுதல்.

# தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குமாறு அழுத்தம் கொடுப்போம்

## இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜெயதுங்க

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டுமென்பதைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தி வந்துள்ளது. தற்போதும் அந்த நிலைப்பாட்டையே அது கொண்டுள்ளது என - இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் சி.ஜெயதுங்க தெரிவித்தார். 'நமது ஈழநாடு' செய்தியாளருக்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

போரை யாருமே விரும்பவில்லை. தென்னிலங்கையிலுள்ள மக்களுள் அநேகமானோர் போரை வெறுப்பவர்களாகவேயுள்ளார்கள். சில இனவாதிகள் தமது அரசியல் இலாபம் கருதி, பொதுமக்களுள் சிலரை திசைதிருப்பி விடுகிறார்கள். இதனாலேயே சமாதான விரோத சக்தியொன்று தென்னிலங்கையிலிருப்பதாக வெளிக்காட்டப்படுகிறது.

நான் 1977ஆம் ஆண்டு காலப்பகுதியிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்தேன். அந்த வேளை என்னோடு கூடப் பல சிங்கள மாணவர்களும் கல்வி பயின்றார்கள். பின்னர் நாட்டில் ஏற்பட்ட இன முறுகல்கள் காரணமாக நாம் இடைநடுவிலே யாழ்.பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேற வேண்டியேற்பட்டது.

அப்போது தென்னிலங்கை சென்ற நாம், தமிழ் மக்களுடைய அவலங்களை நேரிலே கண்டவர்கள் எனும் ரீதியிலே தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டுமென பேசி வந்தோம். அதனால் அரசுடனும் சில வேளைகளில் பகைத்துக் கொண்டோம்.

இன்னும் சிங்கள மக்கள் மத்தியிலே போருக்கு எதிரான கருத்துக்களையே தெரிவித்து வருகின்றோம். தென்னிலங்கை தொழிற்சங்கங்கள் சமாதான விரோத சக்தியான ஜே.வி.பி. பின்னே உள்ளதாக நிலவும் கருத்துத் தொடர்பாக வினவியபோது - அதனை ஏற்றுக்கொண்ட ஜெயதுங்க, சில அரசியல் பின்னணிக் காரணங்களே அதற்கு காரணமெனத் தெரிவித்தார்.

மேலும் ஆசிரிய நியமனங்கள், இடமாற்றங்கள், பதவியுயர்வுகள் என்பவற்றின்போது அரசியல் செல்வாக்கு பிரயோகிக்கப்படுகின்றமை தொடர்பாக தாம் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளுக்குத் தொடரான அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகவும், அரசியற் தலையீடுகளை இல்லாமற் செய்யவேண்டுமெனவும் தெரிவித்தார்.

தமிழ் மொழிமூலப் பாடநூல்களிலே அதிக தவறுகள் இருப்பதைச சுட்டிக் காட்டியபோது, தனக்கும் இது தொடர்பாக முறைப்பாடுகள் பல கிடைக்கப்பெற்று, தான் அவற்றை உரிய குழுவினருக்கு சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவித்ததோடு -

பாடசாலைகளுக்கான சுற்று நிருபங்களை அச்சிடும்போது, தமிழ் மொழிமூல சுற்று நிருபங்கள் காலதாமதமாவதாகவும், அதனால் தமிழ் மாணவர்கள், ஆசிரியர்கள் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடுவதாகவும் கவலை வெளியிட்ட அவர்- அரசுக்கும், கல்வி அமைச்சு செயலாளருக்கும் தாம் இந்த விடயத்தைச் சுட்டிக் காட்டியிருப்பதோடு, இந்தக் குறைக்கு காரணமாகவுள்ள தமிழ் அதிகாரிகள் பற்றாக்குறையையும் நிவர்த்தி செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவித்தார். (94)

# பருத்தித்துறை கடற்தொழிலாளருக்கு ஹற்றன் நஷனல் வங்கி கடனுதவி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச கடற்தொழிலாளருக்கு கடற்தொழில் இயந்திரங்களை கடன் அடிப்படையில் ஹட்டன் நஷனல் வங்கி வழங்க முன்வந்துள்ளது.

இந்தக்கடன் முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்ட 45 பேரில் 13 பேருக்கு குறைந்தபட்ட வட்டிவீதத்தில் கடற்தொழில் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு நெல்லியடியில் உள்ள ஹட்டன் நஷனல் வங்கி தலா ஒரு லட்சம் ரூபாவை வழங்கவுள்ளது.

கடற்தொழில் இயந்திரத்தின் விலை ஒரு லட்சத்து 37 ஆயிரம் ரூபாவாகும். இதில் 37 ஆயிரம் ரூபாவைப் பயனாளிகள் செலுத்தி இயந்திரத்தைக் கொள்வனவு செய்யமுடியும்.

இந்தக்கடன் வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சமாசத்தின் அனுசரணையுடன் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (17)

# லெப்.கேணல் மறவனின் அஞ்சலிக் கூட்டம்!

கடந்த 11ஆம் திகதி சுகயீனம் காரணமாக சாவடைந்த லெப். கேணல் மறவன் மாஸ்டரின் அஞ்சலிக் கூட்டம் நேற்றுமுன்தினம் சுழிபுரம் கடற்புலிகளின் அரசியற்துறை செயலகத்தில் இடம்பெற்றது.

மதியம் 12 மணியளவில் வித்துடல் - தீவகத்தில் அஞ்சலி நிகழ்வு நிறைவுபெற்று, சுழிபுரத்துக்கு எடுத்து வரப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பெருமளவு மக்கள் திரண்டு வந்து வித்துடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் மற்றும் வடமுனை கடற்புலிகளின் கட்டளைத்தளபதி சலீம் மற்றும் சுழிபுரம் அரசியற்துறைப் பொறுப்பாளர் மணாளன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். வித்துடல் மாலை 2 மணியளவில் வடமராட்சிக்குக் கொண்டு செல்லப்பட்டது. (207)

# கட்டுத்துவக்கு வைத்திருந்தவருக்கு சிறைத்தண்டனையும் அபராதமும்!

அனுமதிப்பத்திரம் இன்றி கட்டுத்துவக்கு வைத்திருந்த நபரொருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தால் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், 6 மாத சாதாரண சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

வராத்துப்பளை பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவர், அனுமதிப் பத்திரம் இன்றி வெடிமருந்துகள் நிரம்பிய கட்டுத்துவக்கை வைத்திருந்தமை தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின் போது குறிப்பிட்ட நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்தே- பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி அரியநாயகம் மேற்படி தீர்ப்பை வழங்கினார்.

# உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள ஆசிரியர்களது வீடுகளுக்கு வாடகை வழங்க ஏற்பாடு!

உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் அகப்பட்டுள்ள ஆசிரியர்களது வீடுகளுக்கு வாடகை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை இலங்கை ஆசிரிய சங்கம் மேற்கொண்டு வருகிறது.

வடமாகாண ஆசிரியர் சங்கத்தினரும், இலங்கை ஆசிரியர் சங்க யாழ்.மாவட்ட கிளையினரும் இது தொடர்பான விபரங்களைத் திரட்டி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் கல்வி அமைச்சின் செயலாளருடனான சந்திப்பின்போது, இலங்கை ஆசிரியர் சங்கம் இது தொடர்பாகச் சுட்டிக்காட்டியபோது, அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் 16 ஆம் திகதி மீண்டுமொரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்போது உயர்பாதுப்பு வலயங்களுக்குள் வீடுகளை இழந்துள்ள ஆசிரியர்களது விபரங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை ஆயிரம் ஆசிரியர்கள் இது தொடர்பான விண்ணப்பங்களைச் செய்துள்ளதாகவும், இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் இலங்கை ஆசிரியர் சங்கம், வடமாகாண ஆசிரியர் சங்கம் என்பவற்றோடு தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (94)

# தாதிய உத்தியோகத்தர்கள் ஜனவரி முதல் இடமாற்றம்

மந்திகை அரசினர் வைத்தியசாலையிலிருந்து 11 தாதிய உத்தியோகத்தர்கள் ஜனவரி முதலாம் திகதிமுதல் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இவர்கள் வல்வெட்டித்துறை, அச்சுவேலி, கோப்பாய், தெல்லிப்பளை, வவுனியா, திருகோணமலை ஆகிய வைத்தியசாலைகளுக்கே இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

ஏற்கனவே மந்திகை அரசினர் வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக அதனை நிவர்த்திசெய்யாமல் மேலும் 11 பேரை இடமாற்றம் செய்வது வேதனைக்குரியது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (14)

### திருவாசக முற்றோதல்

கந்தர்மடம் யாழ்ப்பாணத்திலுள்ள இந்துசமயப் பேரவை தலைமைச் செயலகத்தில் நாளை வியாழக்கிழமை காலை 8 மணி முதல் திருவாசக முற்றோதல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்தத் தெய்வீக நிகழ்ச்சியில் அடியார்களை ஆசாரசீலர்களாகக் கலந்து இறையருள் பெற்று உய்யுமாறு பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.



யாழ்.கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லோ.யோகராசா தலைமையில் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தில் 23.11.2004 நடைபெற்ற பெற்றோர் விழிப்புணர்வுக் கருத்தரங்கும், கலை நிகழ்விலும் நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் பொ.வைரமுத்து உரையாற்றுவதையும், கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன், யாழ்.வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் கே.குகதாசனும் காணப்படுகிறார்.



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட முன்பள்ளிகளுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில்- ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் கு.கணேசலிங்கம் உரையாற்றுவதையும், அருகிலே வணபிதா அ.ஜேசுதாசன் அடிகளார் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (113)

# சின்னஞ்சிறு செய்திகள்

### அரியாலை விவசாய சம்மேளன பொதுக்கூட்டம்

(அரியாலை)

அரியாலை விவசாய சம்மேளனத்தின் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு, கமநல சேவைகள் உப அலுவலகத்தில் சம்மேளனத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் 2005 ஆம் ஆண்டுக்கான உத்தியோகத்தர்கள் தெரிவு இடம்பெறவுள்ளது.

### புற்றளை ஆலயத்தில் கந்தபுராண படிப்பு

(புலோலி)

தென்.புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் கந்தபுராணப் படிப்பு ஆரம்பமாகியுள்ளது. இந்தக் கந்தபுராணப் படிப்பை சிவஸ்ரீ.சோ.தண்டாயுதபாணி தேசிகர் ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து 40 நாட்கள் கந்தபுராண படிப்பு நடைபெற்று, கடைசி நாள் திருக்கல்யாணப் படிப்பு இடம்பெற்று அடுத்த நாள் கந்தபுராணப் படிப்பைத் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படும். (17)

### கமநல சேவைகள் நிலையத் திறப்புவிழா

நல்லூர் கமநல சேவைகள் நிலைய அரியாலை உப அலுவலகத் திறப்புவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அலுவலகக் கட்டடத்தை அரச அதிபர் செ.பத்மநாதன் திறந்து வைக்கவுள்ளார். இதில் அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் சு. மோகனதாஸ், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் தேவா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

### மானிய விலையில் தென்னங்கன்றுகள்

சங்கானைப் பிரதேச செயலகத்தில் வைத்து மானிய விலையில் தென்னங்கன்றுகள் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

400 தென்னங்கன்றுகளை சங்கானை பிரதேச செயலகம் தலா 10 ரூபாப்படி வழங்கிவருகிறது. தேவைப்படுவோர் குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்தி, தேவையான தென்னங்கன்றுகளைக் கொள்வனவு செய்யலாமெனப் பிரதேச செயலகத்தால் தெரிவிக்கப்பட்டது. (207)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் :சு.செல்வகுமார் விதுஷன்
முகவரி :ஜேர்மனி

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

# வவுனியா - இறம்பைக்குளத்தில் நாட்டிய அரங்கேற்றம்!



வவுனியா நிருத்திய நிகேதன கலாமன்றத்தின் நாட்டிய எழில் சூரிய யாழினி வீரசிங்கத்தின் மாணவி தஜந்தினி தேவதாஸின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று மாலை 3.30 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் மகளிர் தேசிய பாடசாலை கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்வியியற்துறை பேராசிரியா கலாநிதி சபா ஜெயராசா கலந்துகொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கிருஷாந்தி ரவிந்திரா, ரூபவாஹினி தமிழ்ப்பிரிவுப் பணிப்பாளர் எஸ்.விஸ்வநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு. வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.ஆர்.ஏ. ஒஸ்வோல்ட், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் தேசிய பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி செ.ஜெயநாயகி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (03)

# வீதி புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதி வீண் விரயமாவதைத் தடுக்க வேண்டும்

## வன்னிப் பிரதேச மக்கள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வன்னிப் பிரதேசத்தில் இந்த வருடம் கிரவல் மண்மூலம் செப்பனிடப்பட்ட வீதிகள் அனைத்தும், தற்போது பெய்துவரும் மழை காரணமாக சேதமடைந்து காணப்படுகின்றன.




இந்த நிலையில் வீதிப் புனரமைப்பு கடந்த 3 வருடங்களாக தீவிரமடைந்த போதிலும் இந்தப் புனரமைப்புப் பணியால் எவரும் நன்மையடைய வாய்ப்புக்கள் இதுவரையில் ஏற்படவில்லை.

கடந்த காலங்களில் போராட்ட சூழலில், பெரும் இன்னல்களைச் சந்தித்த மக்கள் கோடைகாலங்களில் இந்த வீதிகளில் பயணிக்கும் போது, புழுதிப்படலத்தால் பெரும் சிரமப்படுகின்றனர். அதே போன்று மாரி காலத்தில் பயணிக்கும் போது சேற்று நீரால் மூழ்கடிக்கப்படுகின்றனர்.

இவ்வாறான சிரமங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இந்த வீதிகளின் புனரமைப்புக்குச் செலவிடப்படும்- நிதி கிரவல் மண் என்ற வடிவத்துடன் ஆரம்பிக்கப்பட்டு காற்றுடனும், மழை வெள்ளத்துடனுடம் சென்று விடுகிறது.

இந்த நிலையில் செப்பனிடப்படுகின்ற வீதி ஒரு வருடத்துக்கு புனரமைப்பு நிலைத்திருக்கும் என்பது சந்தேகம்தான். அவ்வாறு நிலைத்திருந்தாலும் கிரவல் மண்ணின் துன்பத்திலிருந்து தப்பிச் செல்ல முடியாத நிலையில் மக்கள் காணப்படுகின்றனர்.

இவ்வாறு புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதியால் பயன் கிடைக்காமல் வீண் விரயமாவதை அவதானிக்க முடிகிறது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, ஆக்கபூர்வமான புனரமைப்பை மேற்கொள்ளுமாறு இந்தப் பிரதேச மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.(ஸ்ரீ)

# பழையகமம் பிரதேசத்தில் வீதி புனரமைக்க நிதி ஒதுக்கீடு

கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள முரசுமோட்டைக் கிராமத்தின் பழையகமம் வீதியைப் புனரமைப்பதற்கென ஒரு லட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, கண்டாவளைப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்ட இந்த வீதி வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் இந்த வீதியூடாகப் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது இந்த வீதி சேறும் சக்தியுமாக காணப்படுகிறது. இதற்கான புனரமைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (இ)

# வட்டக்கச்சி சூசையப்பர் முன்பள்ளியின் ஒளிவிழா நிகழ்வு சிறப்புற நடைபெற்றது

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி கட்சன் வீதியிலுள்ள சூசையப்பர் முன்பள்ளி மாணவர்களின் ஒளிவிழா நிகழ்வு- கடந்த வெள்ளிக்கிழமை மாலை 2 மணியளவில் வட்டக்கச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலை நுழைவாயிலிலிருந்து பிரதம விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை ஜே.ஆர்.எஸ்.நிறுவனத்தின் வன்னி மாவட்ட இயக்குநர் வணக்கத்துக்குரிய அருட்தந்தை ஆனந்தகுமார் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து வரவேற்புரையை சில்வியா திமோஷாயனும், தலைமையுரையை சிவனேசனும், ஆசியுரையை அருட்சகோதரன் வின்சனும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில்- பிரதம விருந்தினர் உரையை ஜே.ஆர்.எஸ்.நிறுவனத்தின் வன்னி மாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஆனந்தகுமார், வட்டக்கச்சி பங்குத்தந்தை அகஸ்ரின் அடிகளார், போதகர் ஜோன் மணி ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் நன்றியுரையை விக்ரோறியா நிகழ்த்தினார். தொடர்ந்து சுதர்சன் ஆசிரியர் தலைமையில் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. (09)

# வவுனியா—நெடுங்கேணி பிரதேசத்தில் 44 பயனாளிகளுக்கு விவசாயக் கடன்

வவுனியா - நெடுங்கேணி பிரதேசத்தில் கெயர் நிறுவனத்தின் நிதியுதவியுடன், நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால், நெடுங்கேணி வடக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள நாவலர் வீதி, சாண்டான்குளம், 6 ஆம் கட்டை, பெண்கள் விவசாயத் திட்டம் போன்ற இடங்களில் 44 பயனாளிகளுக்கு விவசாயக்கடன் மற்றும் சுயதொழில் கடன் ஆகியன வழங்கப்பட்டன.

இந்தப் பிரதேசங்களுக்கான 44 பயனாளிகளுக்கு 4 லட்சத்து 44 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது என, வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கடன் திட்டம் நெடுங்கேணி ஆனந்தர் புளியங்குளம் கிராமசேவையாளர் பிரிவிலுள்ள நொச்சிமோட்டை, சமளங்குளம், ஆனந்தர்புளியங்குளம் ஆகிய கிராமங்களிலுள்ள 14 பயனாளிகளுக்கு ஒரு லட்சத்து நாற்பது ஆயிரம் ரூபா விவசாயக் கடன் மற்றும் சுயதொழிலுக்கான கடன் வழங்கப்படவுள்ளது.

## புதிய அதிபர் நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்துக்கு புதிய அதிபராக சி.சோதிமுருகேசு நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் இடம்பெற்ற நிறுவன ஆளுநர் சபைக்கூட்டத் தீர்மானத்துக்கமைவாகவே, இவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த முதலாம் திகதியிலிருந்து தனது கடமையைப் பெறுப்பேற்றுள்ளார்.(இ)

## பஸ் தரிப்பிடமின்மையால் மக்கள் பெரும் சிரமம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் பஸ் தரிப்பிடம் இன்மையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வட்டக்கச்சி, இராமநாதபுரம், கலமடுநகர் ஆகிய பிரதேசங்களில் பஸ் தரிப்பிடம் இன்மையால், மக்கள் .மர நிழல்களில் பஸ்ஸு"க்காகக் காத்துநிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மழைகாலங்களில் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர். (09)

## வீரர்களுக்கான பயிற்சி முகாம

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத் துறையினரின் ஏற்பாட்டில் தெரிவுசெய்யப்பட்ட, வலைப்பந்தாட்ட அணியினருக்கும், உதைப்பந்தாட்ட அணியினருக்குமான பயிற்சி முகாம் ஒன்று அண்மையில் நடைபெறவுள்ளது.

இந்த மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு அணிகளைத் தயார்ப்படுத்தும் வகையில் மாலதி விளையாட்டு மைதானத்தில் இந்தப் பயிற்சிமுகாம் இடம் பெறவுள்ளது.

இந்தப் பயிற்சி முகாம் 10 நாட்கள் நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார்.

# பளைப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம்

பளைப் பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட 1500 குடும்பங்களுக்கான நிவாரண உதவி மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணி - பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், ஒக்ஸ்பாம் ஆகிய நிறுவனங்களால் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது என, கிளிநொச்சி மாவட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

இந்தப் பணியின் மூலம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர், வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு, சவர்க்காரம், போர்வை போன்ற பொருட்களையும் வைத்தியர் க.குணரட்ணம் தலைமையிலான மருத்துவர் குழுவினர் மூலம் வைத்திய உதவிகளும் வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

# மன்னார் - பப்பாமோட்டைப் பிரதேசத்தில் இராணுவத்தினரால் 120 வீடுகள் அழிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்துள்ள பாப்பாமோட்டை பிரதேசத்தில் கடந்த கால இராணுவ நடவடிக்கையின் போது, 120 இற்கும் மேற்பட்ட வீடுகள் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டன.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் 1999 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிகளில் இந்தப் பிரதேசத்தின் தேனுடையான், மினுக்கன், கட்டைக்காடு, தாமரைக்குளம் போன்ற கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை மூலமே இந்த வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. இந்தப் பகுதியின் ஏனைய வீடுகள் விமானக் குண்டு வீச்சு, எறிகணை வீச்சு போன்றவற்றாலும் அழிக்கப்பட்டதாகவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.



வட்டக்கச்சி சந்தையிலிருந்து இராமநாதபுரம் செல்லும் வீதியில், குறுக்காக வெள்ளம் பாய்வதால் மக்கள் போக்குவரத்துக்கு சிரமப்படுவதை படத்தில் காணலாம் (இ)



வட்டக்கச்சி சுகுணா கடைச்சந்தியிலிருந்து இராமநாதபுரம் சந்திக்குச் செல்லும் பிரதான வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதைக் காணலாம்.
படம்: ஜெயசீலன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*உழன்று ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தமிழ் இலக்கியப் படைப்புலகில் நிரப்பமுடியா வெற்றிடங்கள்....

கடந்த சில வாரங்களுள் ஈழத்தமிழினம் தமிழ்மொழியின் மீது அதீத பற்றும், ஆளுமையும், புலமையும் கொண்ட சிலரை அடுத்தடுத்து இழந்து அளப்பரிய சோகத்துக்குள்ளாகியுள்ளது.

தமிழினதும், ஈழத்தமிழனினதும் தனித்துவ அடையாளத்தைப் பேணும் வகையிலும், அதற்கு உயரிய கௌரவத்தைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலும் தத்தம் புலமையினாலும், ஆக்க இலக்கியப் படைப்பாற்றலினாலும் மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரிய அந்த முதுபெரும் தமிழ் அறிஞர்களும், எழுத்தாளர்களும் ஆற்றிய பணிகளின் கனம் மிகமிக அதிகமானதாகும்.

முதலில் தில்லைச் சிவன் மறைந்தார். அடுத்து புத்தொளி நமைப்பிரிந்தார். தொடர்ந்து கே.வி.நடராஜனை இழந்தோம். இப்போது வளமிகு தமிழ்ச் சொத்தாக நம்மிடம் இருந்த மூதறிஞர் சொக்கன் ஐயாவைப் பறிகொடுத்துவிட்டோம்.

ஆழவேரும், அகல விழுதுமூன்றி காலத்தின் வரலாற்று நிகழ்வுகளை உள்வாங்கி – உணர்ந்து – செழுமை மிக்க, தேமதுரத் தமிழில் அற்புத இலக்கியப் படைப்புக்களாக அவற்றைப் பதிவுசெய்து தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு அளித்து தமது தனித்துவ வளத்துக்குக் கம்பீரமான அடையாளத்தைத் தத்தமது ஆளுமைத் திறனுக்கேற்ப வழங்கிய இவர்கள் என்றைக்கும் போற்றுதலுக்குரியவர்கள் என்பதில் ஐயமேயில்லை.

எமது மண்ணின் வளத்தை, எமது மக்களின் வாழ்வை, எமது கலை கலாசார – பண்பாட்டின் கோலத்தை – அற்புதமான சிந்தனை வீச்சுடன்கூடிய இலக்கியப் படைப்புக்களாக இவர்கள் ஆக்கியளித்த காலம் எம் தாய்மொழி ஈழ மண்ணுக்கேயான தனது தனித்துவ அடையாளங்களை உலகுக்கு வெளிப்படுத்திய காலமாகும்.

'வெல்லச் சுவையினையும், வெல்லக் கவி செய்யும் தில்லைச் சிவன்' எனப் பல்கலைவேந்தன் சில்லையூர் செல்வராசன் என்ற அமர கவிஞனால் புகழப்பெற்ற தில்லைச் சிவன், தனது இறுதிக்காலம்வரை தள்ளாத முதுமையையும் தள்ளிவைத்துவிட்டு, தமிழ்ப்பணி புரிந்தவர். மிக அண்மையில்தான் 'காவல்வேலி' என்ற அவரது சிறுகதைத் தொகுதியும், தந்தை செல்வா குறித்த காவியமும் நூல் வடிவில் வெளிவந்தன.

அவர் மறைந்த இழப்பின் சோகம் மறையும் முன்னரே புத்தொளியாரின் மறைவு இலக்கிய வானை இருளாக்கியது.

அவர் மறைந்த செய்தியை கேட்டு மற்றொரு இலக்கிய மூதறிஞரும், எழுத்தாளரும், பத்திரிகையாளரும், நூல் வெளியீட்டாளருமான மறுமலர்ச்சி வரதர் அவர்கள் ஈழத்து இலக்கிய உலகில் சுடர் விட்டுப் பிரகாசித்த ஒரு நட்சத்திரம் விழுந்துவிட்டது என்று துயரம் ததும்ப குறிப்பிட்டது நிஜமே.

புத்தொளி அகன்ற இருளில் தவித்த இலக்கிய உலகிற்கு அடுத்த இருதினங்களிலேயே மூத்த எழுத்தாளரும் – முற்போக்கு சிந்தனையாளருமான கே.வி.நடராஜனின் இழப்பு குறித்த செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஆற்றல்மிகு படைப்பாளியான இவரது இறுதிக்காலம் வறுமைமிகு எழுத்தாளர்களுக்கான ஓய்வூதியத்தை பெற்று வாழும் கஷ்டம் நிறைந்ததாகவே இருந்தது.

அடுத்தடுத்து மூன்று இலக்கிய இழப்புகளால் நொந்திருந்தவேளை மூதறிஞர் சொக்கன் ஐயாவின் பிரிவுச் செய்தி பேரிடியாக வந்துசேர்ந்தது.

சொக்கன் ஐயாவின் தமிழ்ப்பற்று அளப்பரியது. தமிழ்ப் பணியும் அத்தகையதே. இவை அவரை நாட்டுப்பற்றாளர் என்ற கௌரவத்துக்கு உரியவராக்கியது.

எல்லோரும் தத்தம் முதுமையிலும் அறிவுக் கூர்மையுடன் தமிழுணர்வு குன்றாது வாழ்ந்து ஆக்க இலக்கியப் பணி புரிந்தவர்கள் என்பதுதான் முக்கியமான விடயம்.

அவர்கள் இன்று அமரர்களாகிவிட்டார்கள். அவர்கள் தமிழ் இலக்கிய உலகில் வகித்த இடங்கள் வெற்றிடமாகவே இருக்கும். அவரவர் தனித்துவம் நிரப்பப்பட முடியாததேயாகும். இந்தநிலையில் இழப்பின் துயரிலிருந்தும் மீள்வதும் கடினமே. அவர்கள் தொட்ட பணி தொடரவேண்டும்.

எமது மக்களுக்கு அவர்களின் படைப்பாக்கங்கள் நூலுருவில் கிடைக்க வழிசெய்தல் அவர்களின் வாழ்க்கையை கௌரவித்து போற்றுவதற்கு சமனாகும்.

அதுவே அவர்களுக்கு செய்யும் மிகச் சிறந்த அஞ்சலியுமாகும். அதுமட்டுமல்ல மேலான தமிழ் பணியும் அதுவாகவே இருக்கும்.

## நாடும் நடப்பும்




# தமிழ் மக்களின் முன்னேற்றம் புலிகளால் தான் சாத்தியமாகும்

## சபையில் சம்பந்தன் எம்.பி.

(கொழும்பு)

புலிகளும், தமிழ்க் கூட்டமைப்பினரும் இணைந்து விடிவைப் பெற்றுத் தருவார்கள் என்று, தமிழ் மக்கள் தீர்க்கமாக நம்புகின்றனர். இந்த நம்பிக்கை ஒருநாளும் வீணாகப் போவதில்லை எனச் சம்பந்தன் எம்.பி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கான குழுநிலை விவா தத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது -

தமிழ்க் கூட்டமைப்பினருக்கு வடக்கு - கிழக்கு தமிழர்கள் வழங்கிய ஆணையை அனைவரும் மதிக்கவேண்டும். புலிகளுடன் பேச்சுக்களை நடத்த அரசு தயங்கி வருகிறது. எனினும் உடனடியாக அரசாங்கத்தில் மாற்றம் நிகழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை மிகவும் அவசியம். எமது மக்களை அவர்களது வாழ்விடங்களில் மீளக் குடியமர்த்த, தமிழ்ப் பிரதேசங்களைக் கட்டியெழுப்ப, புனர் நிர்மாணம் செய்ய இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அவசியம். அரசாங்கத்தால் நிறைவேற்றப்படாத இந்தக் கடமைகளை நிறைவேற்றவே தன்னாட்சி அதிகாரசபையைக் கோருகிறோம்.

1987 ஆம் ஆண்டில் தமிழ்மொழி அரச கருமமொழியாக்கப்பட்ட போதிலும், இதுவரை தமிழ்மொழி அமுலாக்கலில் குறைபாடுகள் நிலவுகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர்களான எமக்கு அமைச்சுக் கடிதங்கள் சிங்களத்தில் வருகின்றன. இந்த யதார்த்தத்தில் வடக்கு - கிழக்கு அபிவிருத்தியில் முழுமையாக அரசாங்கம் ஈடுபடுவதும், அந்த நடைமுறைகள் சாத்தியம் அடைவதும் சந்தேகமே. 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்த அனுகூலங்கள் முழுமையாக எமக்குக் கிடைக்கவில்லை.

தன்னாட்சி அதிகாரசபையின் மூலம் எமது மக்களைத் திருப்திப்படுத்த முடியும். இதற்கு எமது மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். எமது மக்களை ஏமாற்றவும், பின்னோக்கிச் செல்லவும் நெகிழ்வுப் போக்கை எம்மால் கடைப்பிடிக்க முடியாது.

இதை எமது தலைவர் பிரபாகரன் தெளிவாகத் தெரிவித்தார். ஏன் தன்னாட்சி அதிகாரசபையைச் சிலர் எதிர்க்கின்றார்கள்? ஹெல உறுமய தேரர்களும் எதிர்க்கின்றார்கள் எனத் தெரிவித்தபோது, அமைச்சர் டக்ளஸ் குறுக்கிட்டு நானும் எதிர்க்கிறேன் என்றார்.

அதற்கு சம்பந்தன் எம்.பி, தெரியும். இதிலிருந்து விலக்கப்பட்டவர். நீங்கள் விலை பேசப்பட்டவர். தயவுசெய்து இடையூறு செய்யாதீர்கள் எனத் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஈ.பி.டி.பிக்கு வாக்குகள் கிடைக்காது. புலிகளுக்குப் பயந்து அரசியல் நடத்துவதாக எம்மை ஆளும் தரப்பினர் தெரிவிக்கின்றனர். நாம் எமது மக்களின் துன்பத்தை அறிவோம். மக்களுக்கு விடிவை ஏற்படுத்தவே முனைகிறோம். தமிழ் மக்களின் முன்னேற்றம் புலிகளால்தான் சாத்தியமாகும்.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்க 10லட்சம் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தற்போது பெய்துவரும் கடும் மழையால் சாவகச்சேரி, சங்கானைப் பகுதிகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே மிகவும் மோசமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டு மக்களுக்கு 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

கடந்த வருடங்களை விட, இந்த முறை யாழ்.குடாநாட்டில் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. சங்கானைப் பகுதியில் தேங்கியுள்ள வெள்ளத்தை வெளியேற்றுவதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். தென்மராட்சி பகுதியில் தேங்கியுள்ள வெள்ளத்தை அகற்ற வேண்டுமாயின் செம்மணி வாய்க்காலில் உப்பாற்றுக் கதவுகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தக் கதவுகள் திறக்க முடியாத நிலையில் உள்ளதால், கதவுகளை உடைத்து வெள்ள நீரை கடற்பகுதிக்கு வெளியேற்ற நீர்ப்பாசன திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. இவர்களின் விபரங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு அனுப்பப்பட்டு, வெள்ள நிவாரணம் வழங்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# நீதிமன்றத்தை அவமதித்ததாக அனுரா மீதும் மனுத்தாக்கல்

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்ததாகத் தெரிவித்து, அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவுக்கு எதிராக ஐ.தே.கவின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்சன் பெர்னான்டோ உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்தமாதம் 22 ஆம் திகதி பொலநறுவை மாவட்டம் மன்னம்பிட்டியில் அனுரா பண்டாரநாயக்க ஆற்றிய உரையை மேற்கோள்காட்டி இந்த மனுவை அவர் தாக்கல் செய்துள்ளார். எதிர்வரும் புதுவருடத் தினத்தன்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்க வெலிக்கடை சிறைச்சாலையில் கைதியாக இருப்பார் என அனுரா பண்டாரநாயக்க ஆற்றிய உரை - உயர் நீதிமன்றத்துக்கு அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளது என மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனுவை ஏற்றுள்ள நீதிமன்ற பதிவாளர், பிரதம நீதியரசர் சரத் என்.டி.சில்வா தற்போது நாட்டில் இல்லாத காரணத்தால், அவர் நாடு திரும்பியபின்பு அவரது பரிசீலனைக்கு முன்வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# முஸ்லிம்களின் பங்களிப்பின்றி பிரச்சினைக்குத் தீர்வில்லை!

## கனேடியத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு எதுவுமில்லாமல், எந்தவித தீர்வும் காணமுடியாதென இலங்கைக்கான கனேடியத் தூதுவர் வலேறி ரேமன்ட் அம்மையார் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் பிரதிநிதிகளுடன் கல்முனையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

ரோக்கியோ மாநாட்டில் எமது அரசாங்கம் - முஸ்லிம்கள் பங்குபற்ற வேண்டுமென வற்புறுத்திக் கூறியிருந்தது. எனவே இது தொடர்பாகக் கனடா தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்குமெனக் கனேடியத் தூதுவர் தெரிவித்தார்.



## கடற்புலிகளின் மூத்த உறுப்பினரும், கடற்தொழிலாளர் சங்க சமாசங்களின் மேலாளருமான

# லெப்.கேணல் மறவன் மாஸ்ரர்

## (எலியாஸ்பிள்ளை.ஸ்ரனிஸ்லோஸ் - தாளையடி, வடமராட்சி கிழக்கு)

மூத்த சொத்தே மூதறிவே!
ஆழக்கடலோடும் சேனையாம்
கடற்புலிகள் அணியின் வீர மறவனே!
செல்லமே, குஞ்சுகளே என்ற
உன் இனிய வார்த்தைகளை
நேற்றுவரை நெஞ்சில் இருத்தினோம்
நேராது உமக்கேதுமென்று
கூற்றுவன் கூடக் குறிபார்த்திருந்தானோ
வீற்றிடத்தில் உமக்கு வேட்டுவைக்க
உம் திடீர் மரணம் கேட்டு
இயற்கை கூட மழையாக அழுகின்றதையா
எம் மனங்களைப் போன்று.

பணிப்பாளர், பணியாளர்கள்.
வடமராட்சி கிழக்கு க.தொ.கூ.சங்கங்களின் சமாச அபிவிருத்திப் பகுதி
தாளையடி.

(807)

### உதவிப் பணிகளில் ஈடுபட்டுவந்த

# சிறுவர் பாதுகாப்பு நிதிய பணியாளர் இருவர் சூடானின் டர்பூரில் சுட்டுக்கொல்லப்பட்டனர்!

சூடானின் டர்பூர் பிரதேசத்தில் உதவிப் பணிகளில் ஈடுபட்டிருந்த சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த இரு பணியாளர்கள் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

டர்பூர் பிரதேசத்தில் இரு பணியாளர்களும வாகனத் தொடரணி ஒன்றில் சென்றுகொண்டிருந்த வேளையே இந்த தாக்குதல் நடத்தப் பட்டது. இந்தத் தாக்குதலையடுத்து சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிதியம் தனது உதவிப் பணிகளை நிறுத்தியுள்ளது.

கொல்லப்பட்ட இருவரும் சூடான் பிரஜைகள் எனவும் இவர்களில் ஒருவர் அபாக்கர் எல் தயேப் என்ற பெயருடைய மருத்துவ உதவியாளரெனவும் மற்றையவர் யாக்கூப் அப்துல் நபி அகமட் என்ற பெயருடைய ஒரு மெக்கானிக் எனவும் சிறுவர் பாதுகாப்பு நிதிய அதிகாரி தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலுக்கு யார் காரணமென்பது இதுவரை தெரியவில்லையெனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக டர்பூர் பிரதேசத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் ஆபிரிக்க யூனியனின் இராணுவம் விசாரணைகளை நடத்தி வருகின்றது.

இதேவேளை தற்போது நடைமுறையிலுள்ள சமாதான ஒப்பந்தத்தை முறிக்கும் முயற்சியில் சூடான் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக கிளர்ச்சிவாதக் குழுவின் தலைவர் நைஜீரியத் தலைநகரில் கருத்துத் தெரிவித்தார்.

இது தொடர்பாக சூடான் விடுதலை முன்னணி அமைப்பின் பேச்சாளர் பாகர் இப்ராகிம் தெரிவிக்கையில் - சூடான் அரசாங்கம் உறுதியளித்தபடி தம்மீதான தாக்குதலை நிறுத்தி நிலைமையை மாற்றாவிட்டால் தாம் சமாதானப் பேச்சுவார்த்தையை இடைநிறுத்தவுள்ளதாகத் தெரிவித்தார்.

சூடான் விடுதலை அமைப்பின் நிலைப்பாட்டையே தாமும் பின்பற்றவுள்ளதாக நீதிக்கும் சமாதானத்திற்குமான அமைப்புத் தெரிவித்துள்ளது.



சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள தாம் நைஜீரிய தலைநகரிலிருந்து உடனடியாக வெளியேறமாட்டோமெனவும், திட்டமிடப்படாத பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்தும் ஈடுபடவுள்ளதாகவும் இரண்டு அமைப்பும் அறிவித்துள்ளன.

சூடானில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கிளர்ச்சிவாதிகள் ஆயுதம் ஏந்தியமையே காரணமென சூடான் அரசு தெரிவித்துள்ளது.

## சிரியாவில் கார் குண்டுத் தாக்குதல்

சிரிய தலைநகரில் நேற்று இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் வீதியால் சென்ற மூவர் காயமடைந்த சம்பவத்திற்கு இஸ்ரேல் அரசே பொறுப்பென சிரியா குற்றம்சாட்டியுள்ளது.

பலஸ்தீனர் ஒருவர் குண்டுவெடித்த காரிலிருந்து தனது மனைவி மற்றும் மகளுடன் இறங்கிச் சென்ற சிறிது நேரத்தில் இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது. இவ்வாறு அந்தக் காரிலிருந்து இறங்கிச் சென்றவர் ஹமாஸ் அமைப்பின் உறுப்பினரான மெஸ்பா அபு ஹெவிலா (வயது 35) எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தனது குடும்பத்தினருடன் பல் வைத்தியத்திற்காக வந்திருந்த வேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக டமஸ்கஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனால் தமது அமைப்பின் உறுப்பினர் ஒருவரே தாக்குதலுக்கிலக்காக்கப்பட்டதாக தெரிவித்த சிரேஷ்ட ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர். அந்த நபரின் பெயரைக் குறிப்பிடவில்லை.

இந்த தாக்குதலுக்கான குண்டு கார்ச் சாரதியின் இருக்கையின்கீழ் நன்கு திட்டமிட்ட வகையில் பொருத்தப்பட்டிருந்ததாக பலஸ்தீன தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலை இஸ்ரேலின் புலனாய்வுப் பிரிவான மொசாட் அல்லது மொசாட்டுடன் இணைந்த அமைப்பே செய்திருக்க வேண்டுமென சிரியாவின் உள்நாட்டு அமைச்சர் காசி கீனன் தெரிவித்தார்.

ஆனால் சிரியாவின் இந்தக் குற்றச்சாட்டு அர்த்தமற்றதென இஸ்ரேலின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அத்துடன் சிரியா பயங்கரவாதிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கைவிடவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

### அமெரிக்கப் படைகளின்

## ஆப்கான் சிறையிலிருந்த கைதிகள் 8 பேர் மரணம்!



அமெரிக்கப் படைகளின் ஆப்கான் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகளில் எட்டுப் பேர் உயிரிழந்துவிட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. இரு கைதிகளே உயிரிழந்ததாக அமெரிக்க இராணுவம் முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் மேலும் மூன்று புதிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக மனிதஉரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகளில் எண்மர் உயிரிழந்தமை பதியப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

சிறையில் இருந்தவேளை சயாசி என்பவர் 2002 ஆம் ஆண்டு உயிரிழந்ததாகவும் அவரது விசாரணை முடிவடைந்துவிட்டதாகவும் மற்றையவரான மொஹமட்கான் இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் கைதுசெய்யப்பட்டதாகவும் அவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளதாகவும் இவர் தொடர்பான விசாரணை இடம்பெற்றுவருவதாகவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

ஆனால் இந்த உயிரிழப்புக்கள் தொடர்பாக எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லையென மனிதஉரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தக் கைதிகளின் உயிரிழப்புக்குக் காரணமான படையினர் மீது விசாரணை நடத்த அமெரிக்க இராணுவம் தவறிவிட்டது அல்லது இவர்களுக்கு தண்டனை வழங்கவில்லையென மனிதஉரிமைகள் அமைப்பு - அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ரம்ஸ் பீல்ட்டுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

ஆனால மூன்று கைதிகளின் உயிரிழப்புத் தொடர்பாக தற்போது விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

அமெரிக்கப் படைகளின் ஆப்கான் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளின் இறுதியான நிலைப்பாட்டைத் தருமாறு மனித உரிமைகள் அமைப்பு அமெரிக்க இராணுவத்திடம் கோரியுள்ளது.

இந்தக் கைதிகளின் நிலை தொடர்பான அறிக்கையை வெளியிடுவதற்கு திகதியைக் குறிக்க முடியாதெனவும் இது தொடர்பாக வொஷிங்டனில் ஆராயப்பட்டு வருவதாகவும் அமெரிக்க அதி காரியொருவர் தெரிவித்தார்.

## இரு ரயில்கள் நேருக்கு நேர் மோதியதில்

# 34 பயணிகள் பலி; 50 பேர் படுகாயம்!

## இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் சம்பவம்



இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் இரு பயணிகள் ரயில்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 34 பயணிகள் பலியானதுடன் 50 பேர் படுகாயமடைந்தனர்.

ரவய அகமதபாத் கடுகதி ரயிலும் உள்ளூர் ரயில் ஒன்றும் பதன்கொட் கிராமத்துக்கும் ஜலண்ட்கார் நகரத்துக்கும் இடைப்பட்ட முகிறியன் கிராமப் பகுதியில் மோதிக்கொண்டதாலேயே இந்தக் கோரவிபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான இரு ரயில்களின் பெட்டிகளும் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன.

பயணிகளில் பெரும்பாலானோர் ரயில் பெட்டிகளுக்கு கீழ் அகப்பட்டு நசியுண்டு பலியானதாக இந்திய ரயில்வே அமைச்சர் லாலு பிரசாத் யாதவ் தெரிவித்தார்.

இந்த விபத்தின்போது இந்திய ரயில்வே அமைச்சகத்தின் சிரேஷ்ட அதகாரியும் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையில் 28 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பஞ்சாப் மாநில அரச பேச்சாளர், காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அச்சம் தெரிவித்தார்.

இறந்த மற்றும் காயமடைந்தவர்களது விபரங்களை அறிந்துகொள்வதற்காக பல்லாயிரக்கணக்கானோர் அகமதபாத் ரயில் நிலையத்தைச் சூழ்ந்துகொண்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரையில் இந்த ரயில் விபத்துக்கான காரணங்கள் கண்டறியப்பட்டவில்லை என்றும் எந்த ரயிலின் தவறால் இந்த விபத்து இடம்பெற்றது என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகவும் இந்திய மத்திய ரயில்வே போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார்.

# ஈராக் தலைநகரில் 2 ஆவது நாளும் கார்க்குண்டு தற்கொலை தாக்குதல்!

## ஒருவர் உயிரிழப்பு; 12 பேர் படுகாயம்!



ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் அதி உயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற கார்க்குண்டு தற்கொலைத் தாக்குதலில் ஈராக்கிய தேசியக் காவற்படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டதுடள் 12 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

பாக்தாத்தின் இந்த உயர் பாதுகாப்பு பகுதியினுள்ளேயே அமெரிக்க கூட்டுப்படைத் தலைமையகம் மற்றும் முக்கிய அமெரிக்க ஈராக்கியப் பிரமுகர்களின் வாசஸ்தலங்கள் என்பன அமைந்துள்ளன.

இந்தப் பிரதேசத்திற்கு அமெரிக்க ஈராக்கியக் கூட்டுப்படையினர் பலத்த பாதுகாப்பு வழங்கிவருகின்றனர்.

இந்தப் பகுதியில் அமைந்திருந்த ஈராக்கிய தேசிய காவற்படையினரின் பயிற்சி முகாம் ஒன்றை இலக்குவைத்தே தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

எனினும் பாதுகாப்புத் தடைகளைத் தாண்டி வெடிமருந்து நிரப்பப்பட்ட காரை பயிற்சி முகாம்வரை செலுத்தமுடியாத தற்கொலைக் குண்டுதாரி பயிற்சி முகாமிற்கு 200 மீற்றர் முன்னே உள்ள சோதனைச் சாவடி ஒன்றில் காரை வெடிக்கவைத்துள்ளார்.

குண்டுவெடிப்பு இடம்பெற்ற சமயம் சோதனைச் சாவடியில் காவற்கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தேசிய காவற்படைவீரர் கொல்லப்பட்டதுடன் வீதியில் சென்றுகொண்டிருந்த பொதுமக்கள் 12 பேர்வரை படுகாயமடைந்தனர்.

கடந்த டிசம்பர் மாதம் ஈராக்கிய முன்னாள் ஜனாதிபதி சதாமைக் கைது செய்ததுடன் ஈராக்கியத் தீவிரவாதிகளினது கட்டுக்கோப்பு அழிக்கப்பட்டுவிட்டதாக அமெரிக்கப் படைகள் தெரிவித்து வந்த கருத்துக்களை ஈராக்கில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் தாக்குதல்கள் பொய்ப்பித்து விட்டதாக ஈராக்கில் உள்ள பி.பி.சி செய்தியாளர் தெரிவித்தார்.



## உலக நோக்கு

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# அரசாங்க ஊழியர்களுக்கு இந்த மாதம் முதல் சம்பள அதிகரிப்பு!

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு பெரும்பாலும் இந்த மாதத்தில் வழங்கப்படுமென, பொது நிர்வாக அமைச்சின் தாபனப் பணிப்பாளர் ரி.பி.கருணாரத்ன தெரிவித்தார்.

இதற்கான அடிப்படைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்துக்காக திறைசேரியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அச்சிடுவதில் உள்ள தாமதத்தைத் தவிர்க்கும் முகமாக சம்பள அதிகரிப்பு விபரங்கள் கணனிமயப்படுத்தப்படும்.

சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் இதன் அடிப்படையில் சம்பள அதிகரிப்பை வழங்கமுடியும்.

இந்த ஏற்பாடு காரணமாக அரசாங்க நிறுவனங்களின் ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பை இந்த மாதத்தில் இருந்தே வழங்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்க கூட்டுத்தாபனங்கள் ஏனைய நிறுவனங்கள் தொடர்பான சம்பள அதிகரிப்பு பற்றிய சுற்று நிருபம் காலக்கிரமத்தில் வெளியிடப்படும் என்று பொதுநிர்வாக அமைச்சின் தாபனப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# கடும் மழை ஓய்ந்தாலும் எங்கும் ஒரே வெள்ளக்காடு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடந்த மூன்று நாள்களாகப் பெய்த மழையால் பெருமளவு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் மக்களின் இயல்புவாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று மழை சற்றுக் குறைந்திருந்தாலும், வெள்ளப்பெருக்கால் மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்துள்ளதுடன் போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் மாலையிலிருந்து இரவுவரை யாழ்.குடாநாட்டில் 152.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இது இந்த வருடத்தில் இதுவரை யாழ்.குடாநாட்டில் பெற்ற அதிகூடிய மழைவீழ்ச்சியாகும். நேற்றுப் பகல் யாழ்.குடாநாட்டில் ஒரு மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியே பதிவாகியுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்த கடும் மழையால் மூவாயிரம் குடும்பங்களுக்கு மேல் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளன. அத்துடன் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் பலரின் வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன.

வன்னியிலுள்ள குளங்கள் நேற்றும் வான் பாய்ந்தவண்ணமுள்ளன. இரணைமடுக்குளத்தின் 11 வான் கதவுகளிலிருந்தும் நீர் வெளியேறும் அளவு நேற்று அதிகரிக்கப்பட்டிருந்தது. முதலாது கதவால் 2 அடி நீரும், 4 தொடக்கம் 5 வரையான கதவுகளால் 41/2 அடி நீரும், 11 ஆவது கதவால் 3 அடி நீரும் வெளியேறும் வகையில் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சிக்குளம் வான் பாய்வதால் வட்டக்கச்சி ஊடான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் இரணைமடு வான் கதவின் மேற் பகுதி சிறிய பாலத்தினூடாக மோட்டார் சைக்கிள், சைக்கிள் மற்றும் நடை பயணிகள் நேற்றுக் காலையிலிருந்து மாலைவரை செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

தொடர்ந்தும் வன்னியின் பல பாகங்களுக்குமான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதால், விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினரும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும் மக்களுக்கான போக்குவரத்து வசதிகளை வெள்ளம் பாயும் பகுதிகளில் இலவசமாக மேற்கொண்டு வருகின்றனர்.



வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ள நிலையில் இரணைமடுக்குளம்

நேற்றுக்காலை கிளிநொச்சி மாவட்டத்தில் 102.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதேவேளை வங்காள விரிகுடாவில் காணப்பட்ட தாழமுக்கம் இப்போது வலுவிழந்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான இடங்களில் காலநிலை சீரடைந்து வருகிறது. ஆயினும் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடும் மழை பெய்யக்கூடிய சாத்தியமிருப்பதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# மீட்புப்பணியில் ஈடுபட்ட பொலிஸ் கொன்ஸ்டபிளை வெள்ளம் இழுத்துச் சென்றது!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் கல்லோயா குடியேற்றத் திட்டத்தில் வெள்ளத்தால் அள்ளுண்டு சென்றுகொண்டிருந்த பெண்ணையும், அவரது குழந்தையையும் மீட்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஒருவர் காணாமற்போயுள்ளார்.

அம்பாறை மத்திய முகாமில் கடமையாற்றிவரும் அக்கரைப்பற்றைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பாலா (வயது 35) என்ற பொலிஸ் கான்ஸ்டபிளே காணாமற் போயுள்ளார்.

கடந்த மூன்று தினங்களாக நாவிதன்வெளிப் பிரதேசத்தின் கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தில் அமைந்துள்ள கிட்டங்கி தாம்போதி ஊடாக நான்கு அடி உயரத்தில் வெள்ளம் பாய்ந்து வருகின்றது.

வெள்ளம் பாய்ந்துகொண்டிருந்த வேளை வீதியைக் கடப்பதற்கு முற்பட்ட குடும்பப் பெண்ணும் அவரது நான்கு வயது சிறுமியும் வெள்ளத்தில் அள்ளுண்டு சென்றுகொண்டிருந்தவேளை கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸார் அவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதன்போது குடும்பப்பெண்ணையும் அவரது சிறுமியையும் காப்பாற்றியபோதும் மீட்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பாலா என்பவர் காணாமற் போயுள்ளார்.

காணாமற்போன பாலாவை மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டபோதிலும், இவர் நேற்று மாலை வரை கண்டுபிடிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (07)

# தெற்காசியாவின் மூன்றாவது பலம்வாய்ந்த சக்தியாக கடற்புலிகள் வளர்ந்துவருவதை தடுக்க இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## சென்னை கருத்தரங்கில் பேராசிரியர் சூரியகுமாரன்

தெற்காசியப் பிராந்தியத்தில் மூன்றாவது பலம்வாய்ந்த கடற்படையாக கடற்புலிகள் படிப்படியாக வளர்ந்து வருவதைத் தடுக்க இந்தியா உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென இந்திய கலிகற் பல்கலைக்கழகத்தின் கடல் வளக் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சித்துறைப் பேராசிரியர் சூரியகுமாரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் இந்தியப் பார்வையில் இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் என்ற தலைப்பில் கருத்துரை வழங்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் -

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால் தெற்காசியப் பிராந்தியத்தில் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் தமது கடற்புலிகளுக்கும் கடற்படை அந்தஸ்துக் கோரியுள்ளனர். அவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் இலங்கைக் கடற்பரப்பில் மூன்றில் இரண்டு பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் வந்துவிடும்.

இந்தியாவின் நலன் கருதி இந்திய அரசாங்கம் விடுதலைப் புலிகளது கடற்புலிகளது செயற்பாடுகளை முடக்கவேண்டும். ஆரம்பக் கட்டத்திலே கடற்புலிகளின் நடவடிக்கைகளை முடக்காதுவிடின் பின்னர் அவர்களைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம்.

அண்மைய சில காலங்களாக இந்திய மீனவர்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவுபெற்ற வடபகுதி மீனவர்களால் தாக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு மீனவர்கள் தாக்கப்பட்டு வருவதானது பாக்குநீரிணைப் பகுதியில் யுத்த சூழ்நிலையைத் தோற்றுவித்து வருகின்றது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்திய, இலங்கை மீனவர்களை இருநாட்டுக் கடற்பரப்பினுள்ளும் 5 கடல் மைல்களுக்கு அனுமதிக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

## விபத்தில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி - மீசாலைப் பகுதியில் இராணுவ வாகனம் ஒன்று மோதியதில் இருவர் காயமடைந்தனர்.

மீசாலை சந்திப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர்களை எதிரேவந்த இராணுவ வாகனம் மோதிவிட்டுத் தப்பிச்சென்றதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் மாலை இடம்பெற்றது.

# இந்தியக் கடற்படை....

இவற்றுடன் செடெக் ஹெலிகொப்டர்களும் கொழும்புக்கு வந்துள்ளன. இவை இலங்கைக் கடற்படையின் சயுர, ஜெயசேகர ஆகிய கப்பல்களுடன் இணைந்து ஒப்பரேசன் எக்ஷத் என்ற பயிற்சி நடவடிக்கையை ஆரம்பிக்கின்றது.

இன்று அரம்பமாகும் பயிற்சி நாளையும் தொடர்ந்து இடம்பெறும். இந்த ஒத்திகைப் பயிற்சியில் பங்கேற்பதற்காகவே கடலோர காவற்படையின் கட்டளை அதிகாரி வைஸ் அட்மிரல் ஏ.கே.சிங் கொழும்பு வந்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு வந்த இவர் கூட்டுப்படைத்தளபதியும், கடற்படைத்தளபதியுமான வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி, லெப்ஜெனரல் சாந்தகொட்டேகொட, விமானப்படைத்தளபதி எயர்மாஷல் டொனால்ட்பெரேரா, பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ண சிறிவிக்கிரமநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

வைஸ் அட்மிரல் எ.கே.சிங் இன்று கடற்படைத் தலைமையகத்தில் நடைபெறவுள்ள "கடற்கொள்ளைகளைத்தடுத்தல், தேடுதல், மீட்பு, கடத்தல் முறியடிப்பு" என்ற கூட்டுக்கருத்தரங்கில் பங்கேற்பார். இதில் முப்படை சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் பங்கேற்கவுள்ளனர்.

# ஹெலி....

நிலையில் எமது ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்துவது ஆபத்தானது என நாம் கருதுகின்றோம்.

பாதுகாப்பு அமைச்சுடனும் இந்தத் தீர்மானம் தொடர்பாக பேசப்பட்டு இணக்கமும் பெறப்பட்டது.

இதேவேளை, ரஷ்ய வான்பரப்பில் அத்துமீறி பறந்ததாக குற்றம்சாட்டப்பட்டு விமானப்படைக்கு சொந்தமான விமானங்கள் தடுத்துவைக்கப்படவில்லை. இது தொழில்நுட்ப ரீதியிலான பிரச்சினையாலேயே ஏற்பட்டது.

எமது விமானங்கள் தடுத்து வைக்கப்படவில்லை. இது விமானப் படையின் விமானம் என்பதால் ரஷ்ய பாதுகாப்புப் படையின் அனுமதியைப் பெறவேண்டியிருந்ததாலும் விடுமுறை தின்ம் மற்றும் இரவில் பயணித்த காரணமாக அங்கு தரித்து நிற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# பாதிக்கப்பட்ட....

இந்தக் கூட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் புள்ளி விபரங்களைத் திரட்டி எப்பகுதிகளில் உதவிகளை வழங்குவது தொடர்பாக இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்துரையாடுவதென தீர்மானிக்கப்பட்டது.

இதன்பின்னர் இடம்பெயர்ந்த மக்களுக்கான உடனடி மனிதாபிமான உதவிகள் மேற்கொள்ளப்படுமென தெரியவருகிறது.

# கனடாவில் கொலை முயற்சி 'ஹெல்மெட்' தவா கைது!

கொலைமுயற்சி வழக்கில் தேடப்பட்டுவந்த ஈழத்தமிழரான 'ஹெலமட்' தவா என்ற ஈழத்தமிழர் கனேடியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருப்பதாக கனேடிய 'நஷனல் போஸ்ட்' பத்திரிகையின் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் கனடாவில் வடக்கு மொன்றியலில் ஈழத்தமிழ் இளைஞர் குழுக்கள் கத்தி, வாள், பொல்லுகளுடன் மோதிக்கொண்ட சம்பவத்தில் கொலைசெய்ய முயற்சித்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஹெல்மெட் தவா தேடப்பட்டு வந்தார்.

கடந்த ஆறு மாதங்களாக கனேடியப் பொலிஸாருக்குத் தண்ணிகாட்டிவந்த இவர், கடந்த வியாழக்கிழமை தமக்குத் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார் என கனேடிய குடிவரவுப் பிரிவுக்கான விசேட அதிரடிப்படையினர் அறிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட சம்பவத்தில் ஈழத்தமிழ் இளைஞர் குழுக்களைச் சேர்ந்த 7 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும், ஹெல்மட் தவா (செல்வராஜா -வயது 24) என்பவரும் கொலின் செல்லத்துரை (வயது 31) என்பவரும் சம்பவ இடத்திலிருந்து தப்பிவிட்டனர் என்றும் கொலின் செலலத்துரை என்பவர் இன்னமும் தேடப்பட்டு வருகிறார் எனவும் கனேடியப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

1990 ஆம் ஆண்டு முதல் கனடாவில் கோஷ்டி மோதல்களில் ஈடுபட்டுவந்த விவிரி மற்றும் ஏ.கே. கண்ணன் குழுக்கள் தற்போது ரொறன்ரோ, மொன்றியல், வன்கூவர் பகுதிகளில் உள்ளனர் என்று புலனாய்வுத்துறை மூலம் கிடைத்த தகவலை் அடுத்து கனேடியப் பொலிஸார் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

## சிப்பாய் தற்கொலை

கொழும்புத்துறைப் பகுதியில் இராணுவத்தின் 51 ஆவது படையணியைச் சேர்ந்த 21 வயதுடைய சஜிந்த பண்டார என்ற சிப்பாய் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அம்பாறை....

பாக்கிதாரி இனங்காணப்படவில்லை.

இதேவேளை, உயிரிழந்த இளைஞன் இராணுவத்துக்கு தகவல் வழங்குபவர் என இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டது.

# அரசின் விசேட செய்தி.....

எரிக் சொல்ஹெய்முடன் இன்று கிளிநொச்சிக்கு நோர்வே பிரதித் தூதுவரும் வருவார். இவர்கள் சமாதான செயலகத்தில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடுவர். இந்தச் சந்திப்பு காலை பதினொரு மணிக்கு இடம் பெறும்.

இந்தச் சந்திப்பு இரு தரப்புக்களையும் நெருக்கமாக வைத்திருக்கும் நோக்கமுடையது எனத் தெரியவருகிறது.

இதேவேளை, நேற்றுக்காலை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொண்ட புறூவ் ஹொவ்டேயை சொல்ஹெய்ம் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. வடக்கு - கிழக்கில் தற்போது நிலவும் போர்நிறுத்த அமுலாக்கம்குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இதேவேளை, நோர்வே சமாதான பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் நேற்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அவர் உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்தார்.

# மரண அறிவித்தல்

## சாம்பசிவம் ரகுலதரன்

வலிகாமம் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சாம்பசிவம் அவர்களின் அன்பு மகனும் சாந்தினியின் அன்புக் கணவருமான ரகுலதரன் நேற்றுமுன்தினம் (13.12.2004) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது புதுக்குடியிருப்பு - வள்ளிபுனம் இல்லத்தில் இன்று (15.12.2004) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் வள்ளிபுனம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**செயலாளர்,தேசிய எழுச்சிப் பேரவை, யாழ்ப்பாணம்.**

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.